வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P.1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஊ්ළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 17.06.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 168 பக்கங்கள் : 12

# பிரபாகரன்கூட பழிவாங்கவில்லை ராஜபக்ஷர்கள் அதைச் செய்தனர்!

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா காட்டம்



கொழும்பு, ஜூன் 17

**ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இராணுவ வீரர்களை சிப்பாய்கள் என விளித்தமைக்காக ராஜபக்ஷர்கள் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். யுத்தம் நிறைவடைந்த பின்னர் அவர்கள் சிறைச்சாலையில் என்னை எவ்வாறு உபசரித்தனர் என்பதை யாரும் மறந்திருக்க வாய்ப்பில்லை. நேருக்குநேர் போர்க் களத்தில் மோதிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன்கூட என் குடும்பத்தை பழிவாங்கவில்லை. ஆனால், ராஜபக்ஷர்கள் அதனை செய்தனர் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

களுத்துறையில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

கடன் பெற்று அதனை மீளச் செலுத்தாமல் மோசடி செய்தமை தொடர்பில் பேசும் போது, ராஜபக்ஷர்களை நினைவு கூராவிட்டால் அது நாம் எமது பொறுப்பைத் தட்டிக்கழிப்பதற்கு சமமாகும்.

மக்களுக்கு எவ்வித பயனும் அற்ற வேலைத் திட்டங்களுக்காக பாரிய தொகையில் கடன் பெற்று, அதனை மோசடி செய்துள்ளனர். இவ்வாறான மோசடிகளின் பலனாக 2022 இல் எரி பொருள், எரி வாயு கப்பல்களுக்கு

11

# கொழும்பு மாநகர சபை தேசிய மக்கள் சக்தி வசம்

## மேயராக வ்ராய் கெல்லி பல்தசார்



கொழும்பு, ஜூன் 17

கொழும்பு மாநகர சபையின் புதிய மேயராக தேசிய மக்கள் சக்தியின் வ்ராய் கெல்லி பல்தஸார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

117 உறுப்பினர்களைக் கொண்ட கொழும்பு மாநகர சபையில் 61 வாக்குகளை விராய் கெல்லி பல்தஸார் பெற்றுக்கொண்டதோடு,

11

# நேற்று முதல் சந்தைக்கு வந்த ஆனையிறவு உப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

கிளிநாச்சி ஆனையிறவு உப்பளம் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படும்போது, 20 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பை சந்தைக்கு அனுப்ப முடியும் என ஆனையிறவு உப்பள முகாமையாளர் விவேகானந்தன் சுஜந்தன் தெரிவித்துள்ளார்.

1990களின் பின்னர் செயலிழந்துபோன ஆனையிறவு உப்பளம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பு, ரஜ லுனு என்ற பெயரில் பொதி செய்யப்பட்டது.

இதற்கு தமிழ் அரசியல்வாதிகள் எதிர்ப்பு

11

# வவுனியா மாநகர சபையை கைப்பற்றியது சங்கு கூட்டு

## முதல்வராகினார் காண்டீபன் தமிழ் அரசு கட்சியும் ஆதரவளிப்பு

வவுனியா, ஜூன் 17

வவுனியா மாநகர சபையின் முதல்வராக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியை சேர்ந்த சுந்தரலிங்கம் காண்டீபன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா மாநகர சபை முதல்வரை தெரிவு செய்வதற்கான கூட்டம் வடக்கு மாகாண

11

# யாழ். குடாநாட்டில் நேற்று மீண்டும் எரிபொருளுக்காக நீண்ட வரிசை!

## மக்கள் வாகனங்களுடன் வீதிகளில்!!



யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ். மாவட்டத்தின் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நேற்று பிற்பகல் முதல் நீண்ட வரிசையில் முண்டியடித்ததை அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக, யாழ் நகர், மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்களினதும், தனியாரினதும் எரிபொருள் நிரப்பு

11

# 'டீல்' அரசியல் தொடர்கிறது

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 17

டீல் அரசியலை முடிவுக்கு கொண்டுவருவதாக கூறிக் கொண்டு ஆட்சிக்கு வந்த தரப்பினரே டீல் அரசியலில் ஈடுபட்டு வருவதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன தலைமையத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே

11

# போதியளவு எரிபொருள் யாழ்ப்பாணம் வந்துள்ளது

## செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தாதீர்கள் என்கிறார் யாழ். பதில் அரச அதிபர் பிரதீபன்



யாழ்ப்பாணம், ஜூன் 17

போதியளவு எரிபொருள் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளது எனவும் செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தவேண்டாம் என யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மக்களிடம் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் பெற்றோல் நிரப்பு நிலையங்களில் திடீரென மக்கள் வரிசைகளில் நின்று வாகனங்களுக்கு பெற்றோல் நிரப்புவதில் முண்டியடித்தனர்.

11

# இலங்கைக்கு ஐ.நா. எச்சரிக்கை

ஜெனிவா, ஜூன் 17

சர்வதேச வர்த்தக போர் காரணமாக இலங்கையின் ஏற்றுமதி தொழில்துறை மிகப் பெரும் பாதிப்பை எதிர் கொள்ளும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ரேர்க் எச்சரித்துள்ளார்.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின்

11

# நாணய நிதியத்தின் இறுதித் திட்டம் இது!

## கீதா கோபிநாத் கருத்து

கொழும்பு, ஜூன் 17

சர்வதேச நாணயநிதியம் தற்போது முன்னெடுக்கும் திட்டத்தை இலங்கைக்கு தேவைப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் இறுதித் திட்டமாக மாற்றுவோம் என அந்த நிதியத்தின் முதன்மை பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கீதா கோபிநாத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் இறுதிக் கட்டத்தில் உள்ள நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் முதன்மை பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கீதா கோபிநாத் அங்கீகாரம் மற்றும் உறுதிப்பாடு குறித்த வலுவான செய்தியை

11

# நாணய நிதியத்தின் தற்போதைய திட்டமே இறுதி திட்டமாக வேண்டும்

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 17

தற்போது நாட்டில் செயல்படுத்தப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதி திட்டமே நாணய நிதியத்தின் இறுதித்திட்டமாக அமையவேண்டும் என தான் விரும்புவதான ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் முதன்மை பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி கீதா கோபிநாத்தின்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி மன்னாரில் தமிழ் அரசுடன் சேர்ந்து ஆட்சி அமைக்கவேண்டும்

## சாள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை

மன்னார், ஜூன் 17

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கு தனிப்பட்ட கோரிக்கை ஒன்றை முன்வைக்கின்றோம். மன்னார் மாவட்ட மக்களின் அரசியல் நலன் சார்ந்து செயல்படுவதற்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளை தயாராக இருக்கிறது. எனவே, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மன்னார் மாவட்டத்தில் எங்களுடன் இணைந்து சபை அமைக்கும் விடயத்தில் முன்வருவார்கள் என நம்புவதாக முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை காலை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 24ஆம் மற்றும் 25ஆம் திகதிகளில் 5 சபைகளுக்கான தவிசாளர்கள் தெரிவு செய்கின்ற நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசு கட்சி மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச சபை தவிர மன்னார் நகர சபை, மன்னார், நானாட்டான், மாந்தை மேற்கு பிரதேச சபைகள் உள்ளடங்கலாக 4 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் கிளையின் நோக்கம் தமிழ் கட்சிகள் அதிக ஆசனங்களை கைப்பற்ற வேண்டும். அதன் மூலம் சபைகளை அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, நாங்கள் செயற்பட்டிருந்தோம்.

தேர்தலுக்கு முன்னர் ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டிருந்தது. ஒவ்வொரு சபைகளிலும் அதிக ஆசனங்கள் எடுக்கின்ற கட்சிக்கு மற்றைய கட்சி ஆதரவு வழங்குவதாக இணக்கப்பாடு ஏற்பட்டது. அதன் அடிப்படையில் நாங்கள் மன்னார் பிரதேச சபையில் தலைமன்னார் பியர் வட்டாரத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு அமைவாக இலங்கை தமிழ் அரசு கட்சி வேட்பாளரை நியமிக்கவில்லை.

அதே போல் மாந்தை மேற்கு பிரதேச சபையில் விடத்தல் தீவு இரட்டை தொகுதி வட்டாரத்தில் இலங்கை தமிழ் அரசு கட்சி வேட்பாளரை நியமித்தால் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற முடியாது என்ற காரணத்தால் அங்கும் நாங்கள் வேட்பாளர்களை போடவில்லை.

அதன் அடிப்படையில் மன்னார் நகர சபை, மன்னார், மாந்தை மேற்கு பிரதேச சபைகள் ஆகிய மூன்று உள்ளூராட்சி சபைகளிலும் ஏனைய கட்சிகளுடன் ஒப்பிடுகின்றபோது இலங்கை தமிழ் அரசு கட்சி அதிக ஆசனங்களை பெற்றுள்ளது.

தேர்தல் முடிவு வந்த பிறகும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பினுடைய ஒருங்கிணைப்பாளர் மற்றும் அக்கட்சியை சேர்ந்தவர்கள் இலங்கை தமிழ் அரசுக் கட்சி தவிசாளரை நியமிக்குமாறும், தாங்கள் உப தவிசாளரை நியமிப்பதாகவும் கூறியிருந்தனர். பின்னர் அவர்கள் நிபந்தனை விதித்தார்கள்.

மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளரை தமது கட்சிக்கு வழங்கும் பட்சத்தில் தாங்கள் ஏனைய சபைகளில் ஆதரவு வழங்குவதாக தெரிவித்தார்கள்.

தொடர்ச்சியாக 3 தடவைகள் பேச்சு நடைபெற்று மூன்றாம் கட்ட பேச்சில் மாந்தை மேற்கு பிரதேச சபையில் தவிசாளர் தெரிவில் முதல் 2 வருடங்கள் இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கும் அடுத்த 2 வருடங்கள் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் வழங்குவது என இரு தரப்பினருக்கும் இடையே உடன்பாடு எட்டப்பட்டது.

மாந்தை மேற்கில் இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு அதிக ஆசனங்கள் இருக்கின்ற காரணத்தினால் எங்களுக்கு முதல் 2 வருடங்களை வழங்க கோரிக்கை விடுத்தோம். ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் யோசித்துவிட்டு கூறுவதாக சொன்னார்கள். ஆனால், அவர்கள் இன்று வரை எந்த முடிவையும் எமக்கு அறிவிக்கவில்லை. குறித்த மூன்று சபைகளுக்குமான தவிசாளரை நாங்கள் அறிவிக்க இருக்கின்றோம்.

நானாட்டான் பிரதேச சபை குறித்து கட்சிகளுக்கு இடையிலான இணக்கப்பாட்டின் பின்னர் முடிவுகள் எடுக்கப்படும். எனவே மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்ட அனைத்து கட்சிகளுக்கும் மக்களுக்கும் ஒரு விடயத்தை கூற விரும்புகிறேன்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களின் கோரிக்கைக்கு அமைவாகவும் கட்சியின் தீர்மானத்திற்கு அமைவாகவும், இந்த கோரிக்கையை விடுக்கிறோம்.

அதிக ஆசனம் பெற்ற சபைகளில் தமிழ் கட்சிகள் முன்வந்து நிபந்தனையற்ற வகையில் எமக்கு ஆதரவு வழங்கவேண்டும்.

மேலும் மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தொடர்பில் 2 வருடங்கள் இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கும் ஏனைய 2 வருடங்கள் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் வழங்க இலங்கை தமிழ் அரசு கட்சி தயாராகவிருக்கிறது-என்றார். (அ)

# போதைப்பொருள்களுடன் யாழில் 4 இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் , ஐஸ் , கஞ்சா மற்றும் போதை மாத்திரைகள் ஆகியவற்றுடன் நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

சுன்னாகம் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில். பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையில் ஒரு கிராம் ஐஸ் மற்றும் 50 கிராம் ஹெரோயின் ஆகிவற்றுடன் ஒருவரும் , 05 கிராம் கஞ்சாவுடன் ஒருவரும் , 04 போதை மாத்திரைகளுடன் இருவருமாக ஐவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை , சுன்னாகம் பொலிஸ் பிரிவில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றத்தில் கைது செய்யப்பட்ட போதை வியாபாரியை , நீதிமன்ற அனுமதியுடன் பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (அ)

# பருத்தித்துறை சிவன் கோவில் மஹோற்சவம் இன்று ஆரம்பம்

வடமராட்சி, ஜூன் 17

புலோலி பர்வதவர்த்தினி சமேத பசுபதீஸ்வரர் (பருத்தித்துறை சிவன்கோவில்) ஆலய வருடாந்த சிவன் மஹோற்சவப் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

விசேட திருவிழாக்களான சந்திரசேகரப் பட்டத்திருவிழா 23ஆம் திகதி திங்கட்கிழமையும் பூந்தண்டிகைத் திருவிழா 28ஆம் திகதி சனிக்கழமை மாலை 7 மணிக்கும் சப்பை ரதத் திருவிழா 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் பிச்சாடனர் திருவிழா 30 ஆம் திகதி திங்கட்கிழமையும் இடம்பெறும்.

தேர்த்திருவிழா அடுத்த மாதம் 1ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 8.30 மணிக்கும் தீர்த்தத்திருவிழா 2ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெறுவதுடன் மஹோற்சவம் நிறைவுபெறும். (அ-02)

# வவுனியா சிங்கள பிரதேச சபை தேசிய மக்கள் சக்தி வசமானது!

வவுனியா, ஜூன் 17

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தியை சேர்ந்த சுதர்சன சாமர வீரக்கோன் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டதுடன் பிரதித் தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் குணபால சரத்மது தெரிவு செய்யப்பட்டார்.

வவுனியா தெற்கு சிங்கள பிரதேசசபைக்கான தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகள் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி தலைமையில் பிரதேசபை மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இதன்போது தவிசாளர் தெரிவுக்கு இருவரது பெயர்கள் பிரேரிக்கப்பட்டன. தேசிய மக்கள் சக்தி சார்பில் சுதர்சன சாமர வீரக்கோன் மற்றும் சுயேச்சைக் குழு சார்பில் கசுன் சுமதிபால ஆகியவர்களின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டன.

இதன்போது குறித்த தெரிவை இரகசிய வாக்கெடுப்பின் மூலம் நடத்துமாறு 10 பேரும் பகிரங்கமாக நடத்துமாறு 7 பேரும் வாக்களித்தனர்.

பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தவிசாளர் தெரிவுகள் இரகசிய வாக்களிப்பின் மூலம் நடத்தப்பட்டது.

வாக்களிப்பு முடிவுகளின் படி தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினருக்கு 12 வாக்குகள் கிடைக்கப்பெற்றன.

சுயேச்சை உறுப்பினருக்கு 5 வாக்குகள் கிடைக்கப்பெற்றன. தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சுதர்சன சாமர வீரக்கோன் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து உப தவிசாளருக்கான தெரிவு இடம்பெற்றது. உப தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் குணபால சரத்மதுவின் பெயர் பிரேரிக்கப்பட்டது. வேறு உறுப்பினர்களின் பெயர்கள் பிரேரிக்கப்படாமையால் போட்டியின்றி அவர் உப தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார். (அ)

# தமிழக அகதிகள் நாடு திரும்ப ஏதுவாக வரைவு

யாழ்ப்பாணம், ஜூன் 17

இந்தியாவின் தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் நாடு திரும்புவதற்கு ஏதுவான பொறிமுறையை உருவாக்கும் வகையிலான கொள்கை ஆவண வரைவு தயாரிக்கப்பட்டு அது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுடன், இலங்கை ஏதிலிகள் மறுவாழ்வு நிறுவனம் (ஓஃபர் சிலோன்) மற்றும் அக்ராட் நிறுவன உத்தியோகத்தர்கள் ஆளுநர் செயலகத்தில் நேற்று கலந்துரையாடினர்.

இந்த ஆண்டு தமிழகத்திலுள்ள 290 குடும்பங்கள் இலங்கைக்கு மீளவர விருப்பம் தெரிவிக்கப்பட்டு அதற்கான ஏது நிலைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

எனினும், அண்மைக்காலத்தில் இடம்பெற்ற சில எதிர்பாராத சம்பவங்களால் இது சவாலானமை தொடர்பில் இலங்கை அரசாங்கம் பொறுப்புடன் கையாண்டமை தொடர்பிலும் வரவேற்கப்பட்டது. (அ)

### மத நல்லிணக்கத்தை வலியுறுத்திய

# கதிர்காமத்துக்கான யாத்திரையில் கிளிநொச்சி இளைஞர்கள் இணைவு

கிளிநொச்சி, ஜூன் 17

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில், நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பமான கதிர்காமத்திற்கான பாதயாத்திரையில் நேற்று கிளிநொச்சியை சேர்ந்த 5 இளைஞர்கள் இணைந்து கொண்டனர்.

பாதயாத்திரை நேற்று முன் தினம் மாலை முகமாலை கிராமத்தில் அமைந்துள்ள அன்பே சிவம் அறக்கட்டளையை அடைந்தது.

இதன்போது, யாழ்ப்பாணத்திலிருந்து பங்கேற்றுள்ள பாதயாத்திரிகர்களான ஐந்து இளைஞர்களும், அன்பே சிவம் அறக்கட்டளையினால் வரவேற்கப்பட்டனர்.

நேற்று இந்த இளைஞர்களுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து பாதயாத்திரை செல்லும் ஐந்து இளைஞர்களையும் இணைத்து வழியனுப்பும் நிகழ்வு, பளை இரட்டைக் கேணி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது.

ஆலய வழிபாடுகளை தொடர்ந்து, இளைஞர்களுக்கு உணவு பொதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், பிரதேச செயலாளர் இ. த. ஜெயசீலன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவி பணிப்பாளர் ஐ.தவேந்திரன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர்கள், அறநெறி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், இளைஞர் யுவதிகள் பங்கேற்றனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு முதல், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால், இந்தப் பாதயாத்திரை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (அ)

# கணவன்மீது மிளகாய் தூள் வீசிவிட்டு வாகனங்களுக்கு தீ வைத்த மனைவி!

கொழும்பு, ஜூன் 17

கணவனின் முகத்தில் மிளகாய் தூளை தூவி வாகனங்களுக்கு தீ வைத்ததாக கூறப்படும் மனைவியும் மகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். இரத்தினபுரி, பலாங்கொடையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கணவரை பிரிந்து வாழும் மனைவி தனது மகளுடன் கணவரின் வீட்டுக்குச் சென்று கணவனின் முகத்தில் மிளகாய் தூளை தூவிவிட்டு அவருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் மற்றும் கெப் வாகனத்துக்கு தீ வைத்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் 43 வயதுடைய மனைவியும் 23 வயதுடைய மகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
16.06.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# மற்றவர்களின் தகுதி பற்றிப் பேசுதல்

தேசிய மக்கள் சக்தி பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைக்க முயற்சித்தால் அவர்களுக்கு இனி ஊழல் பற்றிப் பேசுவதற்கான தகுதியில்லை என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்திருக்கிறார். தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் இயங்குவதாக நம்பிக் கொண்டிருப்பவர்களின் பெரிய பிரச்னை இதுதான. அதாவது, தங்களின் செயல்களை மறந்து மற்றவர்களின் தகுதி பற்றிப் பேசுவது.

சாணக்கியன் இலங்கை தமிழ் அரசு கட்சியில் இணைந்தபோது அவரின் தகுதிபற்றி கட்சிக்குள்ளும் வெளியிலும் பலரும் முகம் சுளித்ததுண்டு. ஏனெனில், அவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுத விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட காலத்தில், போராட்டத்துக்கு முற்றிலும் எதிராக இயங்கிய ஒருவர். இனப்படுகொலை புரிந்ததாகக் கூறப்படும் ராஜபக்ஷக்களுடன் தன்னை இணைத்திருந்தவர். ஒரு காலத்தில் ஒருவர் எடுக்கும் நிலைப்பாட்டைக்கொண்டு இன்னொரு காலப்பகுதியில் அவரை அளவிடுவது சரியானதொரு பார்வை என்றால் முதலில் பாதிக்கப்படப் போபவர் சாணக்கியனாகவே இருப்பார். ஆனாலும், இலங்கை தமிழ் அரசு கட்சியில் அவர் இணைந்ததும் அவரின் கடந்தகால அரசியல் பக்கம் மறைந்துவிட்டது. மக்களும் அதைப் பற்றிப் கவலைப்படவில்லை.

இன்று எவருக்கு என்ன தகுதி இருக்கிறது என்று கேட்க முடியாதளவுக்கு அனைத்தும் மாறிவிட்ட பின்புலத்தில், தேசிய மக்கள் சக்தியின் தகுதி பற்றி இலங்கை தமிழ் அரசு கட்சியைச் சேர்ந்தவர் பேசுவது எந்தளவு சரியானது - எந்தளவு நியாயமானது? நேற்றுவரையில் ஒட்டுக்குழு, கொலையாளிகள், இனப்படுகொலையின் பங்குதாரர்கள் என்று விமர்சிக்கப்பட்ட டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஆதரவுடன் யாழ். மாநகர சபையில் தமிழ் அரசுக் கட்சி ஆட்சியமைத்திருக்கிறது. அவ்வாறாயின், இனி போர்க் குற்றங்கள், மனித குலதத்துக்கு எதிரான குற்றங்கள், அதற்கும் மேலாக இனப்படுகொலை பற்றி பேசுவதற்கான தகுதியை இலங்கை தமிழ் அரசு கட்சி இழந்துவிட்டது என்னும் முடிவுக்கு அல்லவா வரவேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் இப்போது எவரும் எவருடைய தகுதியையும் அளந்து பார்க்கும் தகுதி கொண்டவர்கள் அல்லர். தேர்தல் அரசியலில் தங்களுடைய கட்சியின் மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கான ஓர் உத்தியாகவே துரோகி, தியாகி அடையாளங்கள் புனையப்பட்டன.

ஜீ. ஜீ. பொன்னம்பலம் தவறான பாதையில் பயணிக்கிறார். எனவே, தமிழ் மக்களுக்கான ஒரு தேசிய இயக்கம் தேவை என்னும் கோஷத்தை முன்வைத்தே எஸ். ஜே. வி. செல்வநாயகம் இலங்கை தமிழ் அரசு கட்சியை உருவாக்கினார். ஒரு கட்சியை உருவாக்குவதற்கு அல்லது தங்களுடைய செயலை நியாயப்படுத்துவதற்கு இன்னொருவரை தகுதி குறைப்புச் செய்யும் அரசியல் வரலாறு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் பின்னர் பல ஆயுத விடுதலை இயக்கங்கள் தோன்றிய போது ஒன்றை இன்னொன்று எதிர்ப்பதற்கு துரோகிவாதம் தேவைப்பட்டது. மக்களைப் பொறுத்தவரையில் எவர் ஓட்டப்பந்தயத்தில் முன்னணியில் தெரிகிறாரோ, அவருக்காக கைதட்டும் ஒரு கூட்டமாகவவே இருந்தனர். இப்போதும் அப்படித்தான் இருக்கின்றனர். இல்லாவிட்டால், டக்ளஸ் தேவானந்தாவோடு தமிழ் அரசு கட்சி கூட்டு வைத்துக் கொண்டதை, இதேபோன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவரின் ஆதரவாளர்களால் நேற்றுவரையில் ஒட்டுக்குழு, முகவர்கள் என்றெல்லாம் மோசமாக தூற்றப்பட்டவர்களுடன் கூட்டுச் சேர்ந்ததை அந்தக் கட்சிகளுக்கு வாக்களித்தவர்கள் எதிர்த்திருக்க வேண்டுமல்வா! வீதிக்கு இறங்கியிருக்க வேண்டுமல்லவா! ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை ஏன் - ஏனென்றால், மக்கள் ஓட்டப் பந்தயத்தை ரசிக்கும் வேலையை மட்டுமே செய்து வருகின்றனர்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இப்போது மற்றவர்களின் அரசியல் தகுதி பற்றிப் பேசுவதற்கான தகுதியுடன் எவரும் இல்லை. ஒருவேளை நாளை பிள்ளையான் அரசியலில் பலமடைந்தால், அப்போது அவரது தேவை தவிர்க்க முடியாது என்றால் இதே கட்சிகள் அவருடன் கூட்டுச் சேர்வதற்கான கதவையும் திறந்தே வைத்திருக்கின்றன. ஏனெனில், வடக்குக்கான அரசியல் சமன்பாடு கிழக்குக்கும் பொருந்தும். ஒருவேளை பொருந்தாவிட்டால் தமிழ்த் தேசிய அரசியல் கதைகள் அனைத்தும் அப்பட்டமான யாழ்ப்பாண மேலாதிக்க வாதமாகச் சுருங்கிப் போகும் ஆபத்து உண்டு.

# கொழும்பு மாநகர சபை மேயர் தெரிவு; ஐக்கிய மக்கள் சக்தி சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 17

கொழும்பு மாநகரசபை மேயர் தெரிவு தொடர்பான வாக்கெடுப்பு தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு மாநகர சபையில் நேற்று நடைபெற்ற மேயர் தெரிவு தேர்தல் நடவடிக்கைகள் அரச நிர்வாக அமைச்சின் வழிகாட்டுதல்களுக்கு புறம்பான வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் நாயகம் சாரங்கிகா ஜயசுந்தரவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கட்சி தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு மாநகர சபை பதவிகள் தெரிவு செய்யப்பட்டதையடுத்து தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில், இந்த முக்கிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் கட்சியின் மூத்த தலைவர்கள் மற்றும் பல சட்ட ஆலோசகர்கள் பங்கேற்றிருந்தனர்.

வாக்கெடுப்பின்போது, வழிகாட்டுதல்களை பின்பற்றாமலே இரகசிய வாக்கெடுப்பை நடத்துவதற்கு ஆணையாளர் நாயகம் தீர்மானித்துள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனவே, அவர் மீது நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும் எனவும் சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், அடுத்த சில நாட்களுக்குள் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# பணிப்பகிஷ்கரிப்புக்கு தயாராகும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஜூன் 17

வைத்தியர்களின் மேலதிக நேர கொடுப்பனவு திருத்தங்கள் தொடர்பான சுற்றறிக்கை உடனடியாக வெளியிடப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலதிக நேரக் கொடுப்பனவு திருத்தங்கள் தொடர்பான சுற்றறிக்கைகள் உடனடியாக வெளியிடப்படா விட்டால், ஜூன் 30ஆம் திகதிக்குப் பின்னர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான சமில் விஜேசிங்க, கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

நீண்ட காலமாக மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பான திருத்தங்களை அரசாங்கத்திடம் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரி வருகின்றது. இந்த கொடுப்பனவு, வைத்தியர்கள் மேற்கொள்ளும் மேலதிக பணிச்சுமைக்கு ஈடாக வழங்கப்படும் நிதி உதவியாகும். எனினும், இதற்கான சுற்றறிக்கைகள் இதுவரை உரிய முறையில் வெளியிடப்படவில்லை என சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய சமில் விஜேசிங்க-

அரச வைத்தியர்களின் கூடுதல் கடமைகளுக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். இது தொடர்பான சுற்றறிக்கைகள் உடனடியாக வெளியிடப்படா விட்டால், எமது சங்கம் ஜூன் 30ஆம் திகதிக்குப் பின்னர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்படும். இது நோயாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தினாலும், அரசாங்கத்தின் உடனடி நடவடிக்கையின்மையே இதற்கு காரணமாக இருக்கும் - என்றார். (அ)

# முதியோரின் பாதுகாப்புக்கு வட்ஸ்அப் சேவை

கொழும்பு, ஜூன் 17

முதியோரின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.


முதியவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் மற்றும் புறக்கணிப்புக்கள் தொடர்பில் முறைப்பாடு செய்ய விசேட வட்ஸ்அப் எண் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இனி, இதுபோன்ற சம்பவங்களைப் பொதுமக்கள் தேசிய மூத்த குடிமக்கள் செயலகத்துக்கு நேரடியாக தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடு செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள தொடர்பு இலக்கம் 0707 89 88 89 ஆகும், இதன் ஊடாக 24 மணி நேரமும் செயல்படும் வட்ஸ்அப் சேவையின் ஊடாக முறைப்பாடு செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நடவடிக்கை, முதியவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள் குறித்து விழிப்புணர்வூட்டும் சர்வதேச தினத்தை முன்னிட்டு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். தள்ளிப்போன விஷயங்கள் உடனே முடியும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் கவனமுடன் பழகுங்கள்.

**மிதுனம்**
கடினமான காரியத்தையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். தாய்வழியில் மதிப்புக் கூடும். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய உறவினர் நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சி அதிகாரிகள் பாராட்டுவார்.

**சிம்மம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கனவு நனவாகும்.

**கன்னி**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**துலாம்**
உங்கள் பேச்சில் அனுபவஅறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**விருட்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மனக்குழப்பம் நீங்கி எதிலும் ஒரு தெளிவு பிறக்கும். தோற்றப் பொலிவு கூடும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை நீங்களே முன்னின்று முடிப்பது நல்லது. உத்தியோகத்தில் தர்மசங்கடமான சூழல்களில் சிக்குவீர்கள். சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டும்.

**மகரம்**
திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவை.

**கும்பம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிரியமானவர்களுக்காக சில வற்றை விட்டுக் கொடுப்பீர்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். நினைத்தது நிறைவேறும்.

**மீனம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள் புது ஏஜென்சி எடுப்பீர்கள். வியாபாரம் தழைக்கும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.




# முல்லைத்தீவில் நேற்று காலை 2 கடைகள் தீயில் எரிந்து நாசம்

முல்லைத்தீவு, ஜூன் 17

முல்லைத்தீவு, மாஞ்சோலை மருத்துவமனைக்கு முன்பாகவுள்ள இரு கடைகள் தீயில் எரிந்து நாசமாகின.

முல்லைத்தீவு கிச்சிராபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் மாஞ்சோலை மருத்துவமனை முன்பாகவுள்ள உணவகம் ஒன்றில் ஏற்பட்ட தீயில் உணவகம் மற்றும் அருகில் உள்ள காலணி விற்பனையகம் நேற்றுக் காலை 07.30 மணியளவில் முற்றாக எரிந்தன. அதனையடுத்து அருகே இருந்த கடைகளிலுள்ள பொருட்கள் துரித கதியில் அகற்றப்பட்டன.

குறித்த சம்பவத்தை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த இராணுவத்தினர், பொலிஸார், அப்பகுதி வர்த்தகர்கள், பொது மக்கள் இணைந்து தீயைக் கடும் பிரயத்தனத்தின் மத்தியில் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சம்பவ இடத்தை பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர்கள் பார்வையிட்டிருந்ததனர். அத்தோடு

தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டறிப்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தீயணைப்பு வசதி இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. தீ பரவும் சந்தர்ப்பத்தில் தீயணைப்பு கருவி இல்லாத காரணத்தாலேயே பெரும் அசம்பாவிதங்கள் ஏற்படுவதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

(எ)

# ஹெரோயின், ஐஸ் போதைப்பொருளுடன் 25 வயது இளைஞன் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 17

50 கிராம் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவரை சுன்னாகம் பொலிஸார் நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது, சுன்னாகம் பொலிஸ் பிரிவில் கடந்த வாரம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரை நீதிமன்ற அனுமதியுடன் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், விசாரணைகளின் பிரகாரம் கந்தரோடையில் வைத்து 25 வயது இளைஞன் ஒருவரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்து சோதனையிட்ட போது 50 கிராம் ஹெரோயின் மற்றும் ஒரு கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த நபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் கூறினர். (எ)

# நீர்வேலியில் சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் -25 ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05.30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும், சிறப்புச் சொற்பொழிவை இளஞ்சைவப்புலவர் ச. நவநீதன் "திருச்செந்திப் படலம்" என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார். சொற்பொழிவிலிருந்து.

நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

(எ)

## மன்னார் நகர சபை எல்லைக்குள்

# சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய மாடு அறுக்கும் நிலையத்துக்கு சீல்

மன்னார், ஜூன் 17

மன்னார் நகர சபை எல்லைக்குள் காணப்படும் மாட்டு இறைச்சி விற்பனை நிலையங்களுக்கான மாடு அறுக்கும் நிலையத்துக்கு மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனையால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டை தொடர்ந்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மன்னார் பள்ளிமுனை பகுதியில் அமைந்துள்ள மாடு அறுக்கும் நிலையமானது பல வருடங்களாக சுகாதார நடைமுறைகளுக்கும் அரச அறிவுறுத்தல்களுக்கு அமைய இயங்காத நிலையில் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் மன்னார் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து குறித்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

குறிப்பாக மாடுகளை அறுக்கும் பகுதி அசுத்தமாக காணப்பட்டமை, உரிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாமை, விலங்கு கழிவுகள் சுற்றுப்பகுதிகளில் காணப்பட்டமை, கழிவு அகற்றும் செயல்பாடுகள் ஒழுங்கு படுத்தப்படாமை, கழிவுநீர் தேங்கி காணப்படுகின்றமை, மாடுகளை அறுக்கும் போது பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாமை போன்ற பல்வேறு குறைபாடுகளின் அடிப்படையில் குறித்த நிலையத்துக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் இலங்கையர்களுடன் எட்டிய இணக்கத்தை வெளியிடுக!

## ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதியிடம் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 17

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் ஜேர்மன் விஜயம் சிறப்பான ஒரு விடயமாகும். அங்கு அவர் புலம்பெயர் இலங்கையர்களை சந்தித்ததிலும் தவறில்லை. ஆனால் அவர்களுடன் ஏதேனும் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தால் அதனை நாட்டுக்கு வெளிப்படுத்தாமலிருக்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா வலியுறுத்தினார்.**



கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜேர்மனுக்கு விஜயம் செய்ததோ அல்லது அங்குள்ள புலம்பெயர் இலங்கையர்களை சந்தித்ததோ எவ்விதத்திலும் தவறல்ல.

ஆனால் அங்கு அவர்களுடன் ஏதேனும் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தால் அது எவ்வகையானது என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

கொழும்பு மக்களில் 60 வீதமானோர் தேசிய மக்கள் சக்தி அற்ற கட்சிகளுக்கே வாக்களித்துள்ளனர். அவ்வாறிருக்கையில் அந்த கட்சிகளுக்கு கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைப்பதற்கு இடமளிப்பதல்லவா ஜனநாயகம்?

அனைவரும் ஒற்றுமையாக இணைந்து செயற்பட்டால் மாத்திரமே மக்களின் எதிர்பார்ப்பினை நிறைவேற்ற முடியும். நாம் வெற்றி பெற்றுள்ள சபைகளில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களை உதாசீனப்படுத்த மாட்டோம். அதேபோன்று அரசாங்கம் ஆட்சியமைத்துள்ள சபைகளில் எமது உறுப்பினர்களை உதாசீனப்படுத்தக் கூடாது-என்றார். (அ)

# மதுபோதை சாரத்தியம் பறிபோன இரு உயிர்கள்!

கொழும்பு, ஜூன் 17

ஹொரணை - கொழும்பு பிரதான வீதியில் கோரலஇம பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் இருவர் உயிரிழந்துள்ளதாக மொரகஹஹேன பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 09.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கார் ஒன்று வீதியை கடக்க முயன்ற நால்வர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கோரலஇம பிரதேசத்தில் நடைபெற்ற இறுதிச் சடங்கு நிகழ்வொன்றுக்கு சென்ற சகோதரிகள் இருவர் தங்களது இரண்டு மகள்களுடன் அருகில் உள்ள உறவினர் வீட்டுக்குச் செல்வதற்காக வீதியை கடக்க முயன்றபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

காயமடைந்த நால்வரும் களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சகோதரிகள் இருவரும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


45 மற்றும் 50 வயதுடைய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் இருவரே உயிரிழந்துள்ளனர்.

காயமடைந்த 11 மற்றும் 17 வயதுடைய இரு மகள்களும் களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், விபத்தினை ஏற்படுத்திய காரின் சாரதி மதுபோதையில் இருப்பதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து 28 வயதுடைய கார் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

# நிதி பிரதி அமைச்சருடன் கொரிய தூதர் சந்திப்பு



கொழும்பு, ஜூன் 17

நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும மற்றும் இலங்கைக்கான கொரிய தூதர் மியான் லீ ஆகியோர் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் நிதி ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடல் நடத்தினர்.

புதிய அரசாங்கத்தின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை தூதருக்கு விளக்கிய அமைச்சர், சூரியப்பெரும அரசாங்கத்தின் முதன்மை நோக்கமானது மோசடி மற்றும் ஊழலை ஒழித்தல், வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல் மற்றும் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதன் மூலம் பொருளாதாரத்தை மீட்டெடுப்பது என்றும் கூறினார்.

அரசாங்கத்தின் முன்னுரிமை நடவடிக்கையாக, "தேசிய ஒற்றைச் சாளர அமைப்பை" நிறுவுவது மிகவும் முக்கியமானது, அதாவது, நாட்டின் குடிமக்கள், வணிகர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு மிகவும் சாதகமாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில், கொரியத் தூதுவர் லீ, கொரியக் கடன்கள் மற்றும் உதவிகளின் கீழ் தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து விளக்கினார். மேலும், அவற்றை விரைவாகச் செயல்படுத்துவதன் மூலம் இலங்கைப் பொருளாதாரம் அதிக பொருளாதார மற்றும் சமூக நன்மைகளை அடைய முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும், இந்தக் கலந்துரையாடலின்போது, கொரிய அரசாங்கம் இலங்கையர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளைத் திறந்துவிட்டுள்ளதாகவும், அதன் மூலம் வெளிநாட்டுப் பணம் அனுப்புதலை அதிகரிப்பதற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டது. (அ)

# பெருந்தோட்ட, சமூக உள்கட்டமைப்பு அமைச்சின் வாகனங்கள் விற்பனைக்கு!

கொழும்பு, ஜூன் 17

பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சுக்கு சொந்தமான பயன்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கான கேள்வி மனுக்கோரல் கோரப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களில் 16 சொகுசு வாகனங்கள் 03 பழைய வாகனங்கள் மற்றும் 03 ஏனைய வாகனங்களும் உள்ளடங்குவதாக அமைச்சு கூறியுள்ளது.

இலங்கை பிரஜைகள் அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் மாத்திரம் இந்த மனுக்கோரலில் பங்கேற்க தகுதியுடையவர்கள் ஆவர்.

இலங்கைப் பிரஜைகள் தங்கள் தேசிய அடையாள அட்டையின் சான்றளிக்கப்பட்ட நகலையும், நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் பதிவுச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகலையும் மனுக்கோரலுக்கு விண்ணப்பிக்கும் போது இணைக்க வேண்டும்.

ஆர்வமுள்ள நபர்கள் மேலதிக தகவலுக்கு சிரேஷ்ட உதவிச் செயலாளர் அல்லது போக்குவரத்து அலுவலரை 0112186076 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மேலும், 2025 ஜூன் 16 முதல் ஜூலை 07 வரை அலுவலக நாட்களில் காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை வாகனங்களை ஆய்வு செய்யலாம் என்றும் பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

## கற்பிட்டி பிரதேச சபை தேசிய மக்கள் சக்தியிடம்

கொழும்பு, ஜூன் 17

கற்பிட்டி பிரதேச சபையை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது.

தவிசாளராக தேசிய மக்கள் சக்தியின் அப்துல் சத்தார் மொகமட் றிகாஸ், பிரதித் தவிசாளராக சமன் குமார் ஹேரத்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி பிரதேச சபைக்கு 32 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் பெரும்பான்மை உறுப்பினர்களை எந்த கட்சியும் பெற்றுக் கொள்ளாத நிலையில் தவிசாளர் தெரிவு நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

அதன்படி இரகசிய வாக்கெடுப்பு மூலம் தவிசாளர் தெரிவு இடம்பெற்றது. இதில் 16 உறுப்பினர்களின் ஆதரவுடன் தேசிய மக்கள் சக்தியின் அப்துல் சத்தார் மொகமட் றிகாஸ் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டதுடன், அவரை எதிர்த்து போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் மொஹமட் இப்றாஹீம் மொஹமட் ஆசிக் 15 உறுப்பினர்களின் ஆதரவை பெற்று தோல்வியை தழுவினார்.

இதில் 32 உறுப்பினர்களும் கலந்துகொண் டனர். இதில் 17 உறுப்பினர்களின் ஆதரவுடன் தேசிய மக்கள் சக்தியின் சமன் குமார ஹேரத் தெரிவு செய்யப்பட்டார். (அ)

# 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் பெறப்பட்ட லைசன்ஸ் குறித்து இன்னும் முடிவில்லை!

கொழும்பு, ஜூன் 17

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் பெறப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்களை இரத்து செய்வது தொடர்பாக எந்தவொரு அவசர முடிவும் எடுக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தால்

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் பெறப்பட்ட அனைத்து சாரதி அனுமதிப்பத்திரங்களும் இரத்து செய்யப்படும்." என்று, 2025 ஜூன் மாதம் 12ஆம் திகதி பத்திரிகை ஒன்றில் மற்றும் சமூக ஊடகங்களில் வெளியான செய்தி தொடர்பாக இலங்கை மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பான இறுதித் தீர்மானம் ஒன்றை மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் இதுவரையிலும் எடுக்கவில்லை என்றும், அது குறித்து எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ)

# இலங்கையின் வெளிநாட்டு கடன்களில் பெரும் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 17

இலங்கையின் வெளிநாட்டுக் கடன் 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில், நாட்டின் வெளிநாட்டுக் கடன் 63.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.


எனினும், 2024 ஆம் ஆண்டில், இலங்கையின் வெளிநாட்டுக் கடன் 5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அல்லது சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்து 68 பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியால் இலங்கைக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் பொறுப்புகள் அதிகரித்ததன் காரணமாக வெளிநாட்டுக் கடன் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வங்கியின் ஆளுநரை சந்தித்தது நாணய நிதிய குழு!

## முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்வு



கொழும்பு, ஜூன் 17

**இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் முதன்மைப் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கீதா கோபிநாத் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.**

இச் சந்திப்பு இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் பொருளாதார மீட்சியில் சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய பங்கு குறித்து இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க இதன்போது பாராட் டினார்.

"இலங்கையின் மீட்பு பாதை - கடன் மற்றும் நிர்வாகம்" என்ற தொனிப்பொருளில் இடம்பெறும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் முதன்மைப் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கீதா கோபிநாத் உள்ளிட்ட குழுவினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் முதன்மை பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கீதா கோபிநாத், சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் உள்ளிட்ட ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளையும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள் வரவேற்றார்.

இதன் போது கருத்து வெளியிட்ட இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க, சர்வதேச நாணய நிதியத்துடனான வலுவான ஈடுபாட்டை ஆதரித்தார். இது அண்மைய பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீள்வதற்கு உதவியாக உள்ளது என்றும் இந்த கூட்டாண்மை வலுவான பொருளாதார அடிப்படைகளுக்கு அடித்தளமிட உதவியதாகவும் நிலைத்தன்மை மற்றும் நிலையான வளர்ச்சியை உறுதி செய்வதற்கு அவசியமென்றும் குறிப்பிட்டார். (அ)

# மத்திய கிழக்கில் பதற்ற நிலை மேலும் ஒரு இலங்கையர் காயம்

கொழும்பு, ஜூன் 17

இஸ்ரேலின் பினீ பிராக்கில் பணிபுரியும் இலங்கை இளைஞர் ஒருவர் நேற்று அதிகாலை ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களில் காயமடைந்துள்ளார்.

இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் தூதுவர் நிமல் பண்டார, காலில் காயம் அடைந்த இளைஞருக்கு சிகிச்சை அளிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தினார்.

காயம் அடைந்த இளைஞர் அக்குரஸ்ஸ பகுதியைச் சேர்ந்தவர் என்றும், அவர் கட்டுமானத் துறையில் பணிபுரிபவர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அதேநேரம், ஈரான் நடத்திய இரவு நேரத் தாக்குதல்களில் இஸ்ரேலின் பாட் யாமில் வசிக்கும் இலங்கைப் பெண் ஒருவர் சிறு காயங்களுக்கு உள்ளானார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 4:00 மணியளவில் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அவரது உடல்நிலை சீராக இருப்பதாகவும், ஆபத்தான நிலையில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, டெல் அவிவ் நகரின் தெற்கே ஒரு வீட்டில் பணிபுரிந்து வந்த மற்றொரு இலங்கைப் பெண் தாக்குதலினால் அவரது குடும்பத்தினருடன் வெளியேற்றப்பட்டார்.

இதனிடையே, இலங்கைத் தூதரகம், அதிகாரிகள் 24 மணிநேரமும் நிலைமையைக் கண்காணித்து வருவதாகக் கூறியது. (அ)

# துப்பாக்கிச்சூட்டுக்கு உடந்தையாக இருந்த சந்தேக நபர் போதைப்பொருளுடன் கைது!

கொழும்பு, ஜூன் 17

துப்பாக்கிச் சூடு மேற்கொண்டு கொலை செய்ய முயற்சி செய்த குற்றத்துக்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த சந்தேக நபர் நீர்கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு காவல் பிரிவின் 20 ஆவது மைல்கல் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதியம், 15 கிராம், 290 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 02 கையடக்கத் தொலைப்பேசிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

சீதுவை கொட்டுகொடை பிரதான வீதியில் 26.11.2023 அன்று ஆண் மற்றும் பெண்ணொருவர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்துக்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த சந்தேகநபர் என்பது பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், குறித்த சம்பவம் தொடர்பில் சீதுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மதவாச்சி குளம் அருகே பெண்ணின் சடலம் மீட்பு

## பொலிஸார் தீவிர விசாரணை

கொழும்பு, ஜூன் 17

அநுராதபுரம், மதவாச்சி, சங்கிலிகனதராவ குளத்திற்கு அருகில் இருந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

மதவாச்சி, சங்கிலிகனதராவ பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடைய பெண்ணொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமானது அநுராதபுரம் பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது கொலையா இல்லையா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# 485 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 17

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது போதைப் பொருட்களுடன் 485 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன்141 பேரும் ஐஸ் போதைப்பொருளுடன் 163 பேரும், கஞ்சா போதைப் பொருளுடன் 165 பேரும் கஞ்சா செடிகளுடன் 04 பேரும், போதை மாத்திரைகளுடன் 12 பேரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 241 கிராம் 616 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 590 கிராம் 345 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 192 கிலோ 807 கிராம் 106 மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருளும், 1938 கஞ்சா செடிகளும், 1324 போதை மாத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# மோ.சைக்கிள்-வான் மோதி விபத்து பெண் மரணம்! ஒருவர் படுகாயம்!!

கொழும்பு, ஜூன் 17

கம்பஹாவில் மினுவாங்கொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பமுனுவ சந்தியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த வானுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது மோட்டார் சைக்கிளின் செலுத்துனரும் பின்புறத்தில் பயணித்த பெண்ணொருவரும் படுகாயமடைந்த நிலையில் மினுவாங்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கம்பஹா, உடுகம்பல பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய பெண் ஆவார்.

இது தொடர்பில் மினுவாங்கொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கோடாவுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூன் 17

கம்பஹாவில் மாகெவிட்ட பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் கோடாவுடன் சந்தேக நபர் ஒருவர் கம்பஹா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் ஜா - எல, ஏகல பிரதேசத்தில் வசிக்கும் 54 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 1079 லீற்றர் (6 பீப்பாய்கள்) சட்டவிரோத மதுபானம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் கோடா கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தொடரும் சீரற்ற காலநிலை

கொழும்பு, ஜூன் 17

புத்தளம் முதல் மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக முல்லைத்தீவு வரையிலான கடற்பிராந்தியங்களில் காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோமீற்றர் வேகத்திலும், சில நேரங்களில் 60 முதல் 70 கிலோமீற்றர் வேகத்திலும் அதிகரிக்கும் சாத்தியம் நிலவுவதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.

நாட்டை சூழவுள்ள ஏனைய கடற்பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

மறு அறிவித்தல் வரை, இந்தக் கடல் பகுதிகளுக்குள் கடற்றொழிலாளர்கள் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

# தம்புள்ளை பிரதேச சபை உறுப்பினர்கள் 6 பேரின் கட்சி உறுப்புரிமை இடைநீக்கம்!

கொழும்பு, ஜூன் 17

தம்புள்ளை பிரதேச சபையின் ஆறு உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து ஐக்கிய மக்கள் சக்தி, கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் கையொப்பத்துடன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தம்புள்ளை பிரதேச சபையின் தலைவர் மற்றும் உப தலைவரை நியமிப்பதில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி நிர்வாகக் குழு மற்றும் கட்சி செயற்குழுவின் முடிவுக்கு இணங்க செயல்படத் தவறியதன் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஹேரத் முதியன்சலே சுசில் ஹேரத், அனில் இந்ரஜித் தசநாயக்க, தனஞ்சய சம்பத் கரதகொல்ல, அலுத்கெதர பிரியரஞ்சன குமாரரத்நாயக்க, ஹேரத் முதியன்சேலாகே குசுமா குமாரி மற்றும் கிரிஷாந்தி தில்ருக்ஷி பிரேமரத்ன ஆகியோரின் கட்சி உறுப்பினர் பதவி உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பு குறித்து இன்னும் தீர்மானமில்லை!

## நீதி அமைச்சர் ஹர்ஷன



**கொழும்பு, ஜூன் 17**

**புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்குரிய பணி ஆரம்பமாகும் திகதி தொடர்பில் அமைச்சரவையில் இன்னும் எவ்வித தீர்மானமும் எட்டப்படவில்லை என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.**

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போது, புதிய அரசியலமைப்பு இயற்றப்படும் என தேசிய மக்கள் சக்தி உறுதிவழங்கி இருந்தது.

அதன் தற்போதைய நிலை என்னவென்று அமைச்சரிடம் கேள்வி எழுப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர்- அப்பணியை முன்னெடுப்பதற்குரிய திகதி விவரம் அமைச்சரவையில் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. கொள்கை அளவில் எடுக்கப்பட்ட தீர்மானம் அவ்வாறே உள்ளது. ஆரம்ப மற்றும் முடிவு திகதி பற்றி இன்னும் ஆராயப்படவில்லை. எது எப்படி இருந்தாலும் புதிய அரசியலமைப்பு நிச்சயம் நிறைவேற்றப்படும் என்பது உறுதி."-என்று குறிப்பிட்டார்.

அதேவேளை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் பற்றிய கேள்விக்கு பதிலளித்த நீதி அமைச்சர்,

"புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின்போதே இதற்குரிய பணியும் இடம்பெறும். கால எல்லை தொடர்பில் உறுதிமொழியை வழங்குவதே எனக்கு கஷ்டமாக உள்ளது. எனினும், தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்ட உறுதிமொழியின் பிரகாரம் நடவடிக்கை இடம்பெறும்."-என்றார். (அ)

# வாகன இலக்கத் தகடு விநியோகம் தாமதம்!

கொழும்பு, ஜூன் 17

புதிய வாகன உரிமையாளர்களுக்கு வாகன இலக்கத் தகடுகள் வழங்குவதில் இரண்டு மாத கால தாமதம் ஏற்படும் என்று எதிர்பார்ப்பதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

புதிய விநியோகஸ்தர்களிடமிருந்து இலக்கத் தகடுகளுக்கான கொள்முதல் கோரிக்கையை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் சமர்ப்பித்ததால் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்குள் இந்த செயல்முறை நிறைவடையும் என்றும், அதன் பின்னர் இலக்கத் தகடுகள் வழங்கல் மீண்டும் தொடங்கும் என்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் ஜெனரல் கமல் அமரசிங்க நம்பிக்கை தெரிவித்தார்.

அதுவரை, புதிய வாகன உரிமையாளர்களின் பதிவு விவரங்களை உறுதிப்படுத்தும் அச்சிடப்பட்ட காகித எண் தகடுகள் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் கடிதத்தை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் வழங்கும் என்றும், இந்த நடவடிக்கை குறித்து பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# டிஜிற்றல் மயமாக்கல் தொடர்பில் சிறப்புப் பயிற்சிப் பட்டறை

கொழும்பு, ஜூன் 17

அரச சேவைகளை பயனுள்ள மற்றும் திறமையான சேவையாக மாற்றுவதற்கு செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவது குறித்த சிறப்புப் பயிற்சி பட்டறை ஒன்று நேற்று முன் தினம் அலரி மாளிகையில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தின் அதிகாரிகள் இந்த பயிற்சி பட்டறையில் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது பொது சேவையை டிஜிற்றல் மயமாக்கும் அரசாங்கத்தின் முதன்மை திட்டத்தின் ஆரம்ப அணுகுமுறை குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

பொது சேவைக்குள் செயற்கை நுண்ணறிவு மற்றும் நேர்மையான அணுகுமுறையை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். (அ)

அனுராதபுரம் சிறைக் கைதி விடுதலை

# நீதி அமைச்சு நிர்வாக அதிகாரி ஒருவரிடம் வாக்குமூலம் பதிவு!

கொழும்பு, ஜூன் 17

ஜனாதிபதி பொது மன்னிப்பை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி அனுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து கைதி ஒருவர் விடுவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நீதி அமைச்சின் நிர்வாக தர அதிகாரி ஒருவரிடமிருந்து குற்றப் புலனாய்வுத் துறை வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

அவர் குற்றப் புலனாய்வுத் துறைக்கு அழைக்கப்பட்ட பின்னர், தொடர்புடைய வாக்குமூலம் பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், கடந்த காலத்தில் வழங்கப்பட்ட ஜனாதிபதி பொது மன்னிப்பை பயன்படுத்தி கைதிகள் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டார்களா என்பதை விசாரிக்க, குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் நாடு முழுவதும் உள்ள 28 சிறைச்சாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளனர்.

இதன்படி, அவர்கள் ஏற்கனவே இந்த விவகாரம் குறித்து விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர். (அ)

# கம்பளை, அம்புலுவாவ மலைத்தொடரில் விபத்து!

கொழும்பு, ஜூன் 17

கம்பளை, அம்புலுவாவ மலைத்தொடருக்கு சுற்றுலா சென்ற நபர்கள் பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பில் இருந்து கம்பளை, அம்புலுவாவ பகுதிக்கு சிலர் நேற்று முன் தினம் சுற்றுலா சென்றுள்ளனர்.

இதன்போதே வாகனம் விபத்துக்குள்ளானது.

விபத்தில் ஒருவருக்கு மட்டுமே காயம் ஏற்பட்டுள்ளது. காயமடைந்த நபர் கம்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# வாடகைக்குப் பெற்றுக்கொண்ட வாகனங்களை விற்ற கும்பல் கைது!

கொழும்பு, ஜூன் 17

வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனங்களுக்கு போலி ஆவணங்களை தயாரித்து, அவற்றை விற்பனை செய்த கும்பல் ஒன்று மேல்மாகாணத்தின் வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

மேல் மாகாணத்தின் வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், சந்தேக நபர்கள் மூவரும் வெவ்வேறு பிரதே சங்களில் வைத்து கைது செய்ப்பட்டுள்ளனர்.

மூன்று சந்தேக நபர்களில் இருவர் மஹர பிரதேசத்தில் வைத்தும் மற்றைவர் பேலியகொடை பிரதேசத்தில் வைத்தும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 7 கையடக்கத் தொலைபேசிகள், போதைப் பொருள், போலி தேசிய அடையாள அட்டைகள் 2 மற்றும் ஓட்டோ என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட் டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல் மாகாணத்தின் வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# விகாரையில் புராதன முகமூடிகள் திருடிய தேரர் உட்பட மூவர் கைது!

கொழும்பு, ஜூன் 17

மாத்தறை, வெலிகம, மிரிஸ்ஸ பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் இருந்த விலை யுயர்ந்த புராதன முகமூடிகளை திருடியதாக கூறப்படும் தேரர் உட்பட மூவர் வெலிகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மிரிஸ்ஸ பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் இருந்த விலையுயர்ந்த புராதன முகமூடிகள் திருடப்பட்டுள்ளதாக குறித்த விகாரையின் விகாராதிபதி கடந்த 07 ஆம் திகதி வெலிகம பொலிஸாருக்கு முறைப்பாடு அளித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

24 வயதுடைய தேரரும், 62 மற்றும் 42 வயதுடைய இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட தேரர் குறித்த விகாரையில் வசித்து வருவதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# இலங்கையர்களை இஸ்ரேலுக்கு அனுப்புவது தற்காலிக நிறுத்தம்!

கொழும்பு, ஜூன் 17

தொழிலுக்காக இலங்கையர்களை இஸ்ரேலுக்கு அனுப்புவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் பதற்றமான சூழ்நிலையை அடுத்தே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் கட்டுமானம், விவசாயம் உள்ளிட்ட துறைகளில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்த நிலையில், இஸ்ரேலில் நிலவும் பதற்றமான சூழ்நிலை குறைவடையும் வரை இலங்கையர்களைத் தொழில்களுக்காக அனுப்பவேண்டாம் என டெல் அவிவில் உள்ள இலங்கைத் தூதரகம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணிக்கத்துக்குத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையிலிருந்து நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் இஸ்ரேலுக்கு செல்வதற்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறுமி பாலியல் வன்கொடுமை காதலனின் நண்பன் கைதானார்

கொழும்பு, ஜூன் 17

மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட /ஹளந்தாவ பிரதேசத்தை சேர்ந்த 15 வயதுடைய சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த திருமணமான நபர் ஒருவர் மற்றும் அதற்கு உடந்தையாக இருந்த மற்றொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுமியின் காதலனின் நண்பரான ,சிரிகல பொத்துவில் 106 பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய எரந்த என்பவர் மற்றும் அதே பிரதேசத்தைச் சேர்ந்த நிலந்த என்ற இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி கடந்த 8 ஆம் திகதியன்று மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சென்றுள்ளார். அவர் வீடு திரும்பாததால் சிறுமியின் தாய் இது தொடர்பாக 9 ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பின்னர் சிறுமி 10 ஆம் திகதி வீட்டுக்கு வந்ததையடுத்து அவரது தாயார் அவளுடன் பொலிஸ் நிலையத்துக்கு சென்றுள்ளார்.

இதன்போது பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில்-குறித்த சிறுமி அவரது காதலனின் நண்பர்கள் இருவரைச் சந்திக்க தனது மூன்று தோழிகளுடன் பஸ் நிறுத்தத்தில் காத்திருந்தவேளை சிறுமியின் காதலனின் நண்பர்கள் இருவர், காதலன் அனுப்பிய பணத்துடன் வந்துள்ளனர்.

சிறுமியின் தோழிகள் பணத்தை எடுத்துக்கொண்டு அங்கிருந்து சென்றுள்ளனர். சந்தேக நபருடன் வந்தவரும் சென்றுள்ளார்.

சந்தேக நபர் இரவு 7.30 மணி வரை பஸ் தரிப்பிடத்தில் சிறுமியுடன் இருந்துள்ளதுடன் பின்னர் அவர் சிறுமியை அழைத்துக் கொண்டு முச்சக்கர வண்டியில் சிரிகல பிரதேசத்தில் உள்ள பாழடைந்த வீடொன்றுக்கு சென்றுள்ளார். குறித்த வீட்டில் இருந்த நபருடன் தொடர்பு கொண்டதையடுத்து அவர் இருவரையும் பின் கதவு வழியாக வீட்டுக்குள் அனுமதித்துள்ளார்.

சிறுமி குறித்த வீட்டில் சந்தேக நபருடன் ஒரே அறையில் தங்கியதுடன் இதன்போது பல தடவைகள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி வைத்திய பரிசோதனைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனியமணல் கூட்டுத்தாபன ஊழியர்கள் நிரந்தர நியமனம் கோரி ஆர்ப்பாட்டம்!




திருகோணமலை, ஜுன் 18

திருகோணமலை - புல்மோட்டை கனியமணல் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும் ஊழியர்கள் நேற்றுத் திங்கட்கிழமை காலை நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும், நிலுவை சம்பளத்தை உடனடியாக வழங்க வேண்டும் என்று கோரி நிறுவனத்தின் முக்கிய வாயிலை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# பாதயாத்திரை தடையின்றி நடைபெற குமுக்கன் காளிகாதேவிக்கு பூஜை



காரைதீவு, ஜுன் 17

கதிர்காமத்துக்கான இவ்வருட பாதயாத்திரை எவ்வித பிரச்னையுமின்றி நடைபெற அம்பாறை மாவட்டம் காரைதீவு குமுக்கன் காளிகாதேவிக்கு சித்தர்கள் குரல் அமைப்பினர் விசேட வனபோஜன பூஜையை நடத்தினர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபகர் சிவசங்கர் தலைமையில் நேற்று முன்தினம் அங்கு சென்ற குழுவினர் இவ் வனபோஜன விசேட பூஜையை நடத்தியதோடு காளிகாம்பாள் சிலைக்கு பாதுகாப்பு மேல் பந்தலையும் அமைத்தனர்.

செல்லும் வழியில் காட்டுப் பாதை வெள்ளமின்றி பயணத்துக்கு உகந்ததாக காணப்படுவதாக ஸ்தாபகர் சிவசங்கர் ஜீ தெரிவித்தார்.

இவ்வருட பாதயாத்திரைக்காக எதிர்வரும் 20 ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-08)

# எண்ணெய் காப்பு சாத்தல்

மட்டக்களப்பு, ஜுன் 17

மட்டக்களப்பு - வலையிறவு மடத்துப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு கடந்த 14 ஆம் திகதி காலை 07.00 மணிக்கு விஷேட பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பமானது.

ஆலய மகா கும்பாபிசேக நிகழ்வுகள், கடந்த வெள்ளிக்கிழமை ஆலய பிரதம குரு அருளானந்த சிவாச்சாரியார் குருக்கள் தலைமையில் ஆரம்பமாகின.

விசேட யாக பூஜைகள் இடம்பெற்ற நிலையில் நேற்று முன்தினமும் எண்ணெய் காப்பு சாத்துதல் நடைபெற்றது.

இதேவேளை, மகா கும்பாபிஷேகம் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது. (எ)

# "டெங்கை ஒழிப்போம்" விழிப்புணர்வு நடைபவனி




சாய்ந்தமருது, ஜுன் 17

"டெங்கை ஒழிப்போம் - சுத்தமாக இருப்போம்" எனும் தொனிப்பொருளில் அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருதில் நேற்று விழிப்புணர்வு நடைபவனி நடைபெற்றது.

எம். எஸ். காரியப்பர் வித்தியாலயம் மற்றும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் என்பன இணைந்து விழிப்புணர்வு நடைபவனி சாய்ந்தமருது வொலிவேரியன் பிரதேசத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், சாய்ந்தமருது எம். எஸ். காரியப்பர் பாடசாலையின் அதிபர் எம். எஸ். எம். ஆரிப், ஆசிரியர்கள், மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ. வாசித் அகமத்தும் பங்குபற்றினர்.

இந்த நடைபவனியானது சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் பாடசாலையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய வீதியின் ஊடாக வொலிவேரியன் பிரதேசத்தை சுற்றி மீண்டும் சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் பாடசாலையை வந்தடைந்தது. (எ-06)

# ஓட்டமாவடியில் ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் தீ விபத்து


கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகத்துக்கு அருகிலுள்ள காணி மற்றும் ரயில் செல்லும் ஓட்டமாவடி பழைய பாலத்தின் ரயில் பாதை ஆகியவைகளில் தீப்பரவல் ஏற்பட்டது.

ஓட்டமாவடி பிரதேச செயலகத்துக்கு அருகிலுள்ள காணியில் குப்பைகளுக்குத் தீ வைக்கும் போது அங்கு தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இதேவேளை, ஓட்டமாவடி பழைய பாலம் ரயில் மாத்திரம் செல்வதற்கு பயன்படுத்தப்படும் பாதையாகும். அந்த பாலத்தினூடாக வேறு வாகனங்கள், பாதசாரிகள் எவரும் பயணிக்காத நிலையில் மர்மமான முறையில் தீ பிடித்துள்ளது.

இரு இடங்களிலும் ஏற்பட்ட தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

சம்பவ இடத்துக்கு பிரதேச செயலாளர் ஏ. தாஹிர், பிரதேச சபை செயலாளர் எஸ்.ஏ. அமீர், வாழைச்சேனை போக்குவரத்து பொலிஸார் ஆகியோர் சென்று தீ பரவியதற்கான காரணத்தை கண்டறிய நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (எ)



# மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற பொருட்கள் கைப்பற்றி அழிப்பு

திருகோணமலை, ஜுன் 17

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி எம். அஜித் தலைமையில் கிண்ணியா வாராந்த பொதுச் சந்தையில் விசேட பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற 300 கிலோ கிராமுக்கும் மேற்பட்ட பெரிய வெங்காயம் மற்றும் மரக்கறிகள் என மொத்தமாக 460 கிலோ கிராம் அளவிலான பொருட்கள் பொதுச் சுகாதார பரிசோதகரால் கைப்பற்றப்பட்டது.

அத்தோடு, மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற பொருட்களை விற்பனை செய்த வியாபாரிக்கு கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டு கைப்பற்றப்பட்ட பொருட்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன.

மேலும், இவ்வாறான பரிசோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று சுகாதார வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (எ)



# 7 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டல்

திருக்கோவில், ஜுன் 17

திருக்கோவில் பிரதேச செயலக பிரிவில் "உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்" எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான 7 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலாளர் த. கஜேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா அடிக்கல் நாட்டி வீட்டுத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். (எ)



# ஜ. த. தே. கூ. உறுப்பினர்கள் சத்தியப்பிரமாண நிகழ்வு

திருகோணமலை, ஜுன் 17

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்று முன்தினம் திருகோணமலையில் உள்ள கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல்

## இதுவரை 80 பேர் பலி

தெஹ்ரான், ஜூன் 17

**ஈரானில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் இதுவரை 80 பேர் பலியாகினர்.**

இதேவேளை, இஸ்ரேல் இராணுவம் ஈரானியர்களை ஆயுத தொழிற்சாலைகளை விட்டு வெளியேறுமாறு எச்சரித்துள்ளது.

மத்திய கிழக்கில் கடந்த சில ஆண்டுகளாக இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் காரணமாக பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இந்த நிலையில், ஈரானின் தெஹ்ரானில் ஈரானிய இஸ்லாமிய புரட்சிகர காவல்படை தலைமையகத்தில் கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேல் இராணுவத்தின் இந்தத் தாக்குதல் நடவடிக்கைக்கு "ஒப்ரேஷன் ரைசிங் லயன்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இஸ்ரேல் உடனடியாக தாக்குதலை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்தினர்.

இருப்பினும், ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் அரசாங்கம் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலில் ஈரான் புரட்சிகர காவல்படையின் தலைவர் ஹொசைன் சலாமி உள்ளிட்ட பல்வேறு முக்கிய இராணுவத் தளபதிகள், விஞ்ஞானிகள் உள்ளிட்டோர் பலியானதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதேநேரம் இந்தத் தாக்குதல் மூலம் இஸ்ரேல் போர்ப் பிரகடனம் செய்திருப்பதாக ஈரான் தெரிவித்துள்ளது. இதற்கான விளைவுகளை அந்த நாடு அனுபவிக்கும் என ஈரான் உச்ச பட்ச தலைவர் ஐயத்துல்லா அலி காமெனி அறிவித்துள்ளார். அத்துடன் இஸ்ரேலுக்கு எதிரான பதிலடியை ஈரானும் தொடங்கியுள்ளது.

இஸ்ரேலின் டெல் அவிவ் நகரம் உட்பட பல்வேறு முக்கிய நகரங்களின் மீது ஈரான் எதிர்த் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்தத் தாக்குதல்களில் இதுவரை இஸ்ரேலில் 7 பேர் உயிரிழந்ததாகவும் சுமார் 300 பேர் காயமடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இதனையொட்டி இஸ்ரேல் வான் எல்லை மூடப்பட்டுள்ளது. இதனால், மத்திய கிழக்கில் பெரும் போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், தெஹ்ரானில் உள்ள ஈரான் அரசின் அணு ஆயுதத் திட்டத்துடன் தொடர்புடைய இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. மேலும், இஸ்ரேல் இராணுவம் ஈரானியர்களை ஆயுத தொழிற்சாலைகளை விட்டு வெளியேறுமாறு எச்சரித்துள்ளது.

இதற்கிடையில் ஈரானில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் இதுவரை சுமார் 80 பேர் உயிரிழந்ததாகவும் 320இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும் ஈரானுக்கான ஐ.நா. தூதுவர் தெரிவித்துள்ளார். (எ)

# இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல்

டெல் அவிவ், ஜூன் 17

இஸ்ரேலின் ஹைபா நகரின் மீது ஈரான் மேற்கொண்ட தாக்குதலில் 12 பேர் காயமடைந்துள்ளனர் என இஸ்ரேலிய ஊடகம் தெரிவித்துள்ளது.

அந்தப் பகுதி தீ மூண்டுள்ளதாக தெரிவித்துள்ள இஸ்ரேலிய அரச ஊடகமான ஹான், தாக்கப்பட்ட பல பகுதிகளில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அவசர சேவை பிரிவினர் தெரிவித்தனர்.

இதேவேளை, 12 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என இஸ்ரேலின் அம்புலன்ஸ் சேவை தெரிவித்துள்ளது. (எ)

ஈரானின் இஸ்லாமிய

# புரட்சிகர காவல்படையின் புலனாய்வு தலைவர் பலி!



தெஹ்ரான், ஜூன் 17

ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் புலனாய்வுத் தலைவர் முஹமட் ஹசேமி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேலின் தாக்குதலில் உயிரிழந்ததாக ஈரானின் அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

அவருடன் வேறு சில அதிகாரிகளும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இந்திய முப்படைகளில் பெண்களின் ஆதிக்கம்

புதுடில்லி, ஜூன் 17

இந்தியாவில் முப்படைகளில் இணையும் பெண்களின் எண்ணிக்கை 4 மடங்கு அதிகரித்துள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டில் இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படைகளில் பணியாற்றும் பெண்களின் எண்ணிக்கை 3 ஆயிரம் என்ற அளவில் இருந்தது. தற்போது இந்த எண்ணிக்கை 11 ஆயிரத்தை கடந்துவிட்டதாகவும் இது கடந்த 2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4 மடங்கு வரை அதிகரித்து வந்திருப்பதாகவும் இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது. (எ)

# "துப்பாக்கி கலாசாரத்தை ஒழித்துகட்ட வேண்டும்"

சென்னை, ஜூன் 17

துப்பாக்கி கலாசாரத்தை அடியோடு ஒழித்திட வேண்டும் என்று தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்தார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிச்சாமி வெளியிட்டுள்ள எக்ஸ் வலைத்தளப்பதிவில்,

பா.ம.க. இளைஞரணி மாவட்டச் செயலாளர் சக்கரவர்த்தி, கடந்த 11ஆம் திகதி வாகனத்தில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்ததாக ஸ்டாலின் மொடல் தி.மு.க. அரசால் வழக்குப்பதிவு செய்யப்பட்ட நிலையில், அவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருப்பது உடற்கூராய்வின் மூலம் அம்பலமாகியுள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியில் அமைதி, வளம், வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருந்த தமிழ் நாட்டை பட்டாக்கத்தி, அரிவாள், துப்பாக்கியின் பாதைக்கு கொண்டு சென்றுள்ள தி.மு.க. அரசுக்கு எனது கடும் கண்டனம்.

சட்டம் ஒழுங்கை நிர்வகிப்பதிலோ, மக்களைக் காப்பதிலோ முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு துளியும் அக்கறை இல்லை.

தமிழ்நாட்டில் துப்பாக்கி கலாசாரத்தை அடியோடு ஒழித்திட வேண்டும் என ஸ்டாலின் மொடல் தி.மு.க. அரசை வலியுறுத்துகிறேன் என்று பழனிச்சாமி மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# அமெரிக்காவின் முழு பலத்தையும் ஈரான் மீது இறக்குவோம் - ட்ரம்ப்

நியூயோர்க், ஜூன் 17


ஈரான் எந்த வகையிலும் அல்லது வடிவத்திலும் நம்மைத் தாக்கினால் அமெரிக்க ஆயுதப் படைகளின் முழு பலமும் வலிமையும் இதற்கு முன் கண்டிராத அளவில் அவர்கள் மீது இறங்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை, இஸ்ரேலின் இராணுவம் தெஹ்ரானில் உள்ள ஈரானிய பாதுகாப்பு அமைச்சு தலைமையகத்தைத் தாக்கியதாக அறிவித்தது. மேலும், ஈரானின் அணு ஆயுதத் திட்டத்துடன் தொடர்புடைய தெஹ்ரானை சுற்றியுள்ள பல இடங்களைத் தாக்கியதாகவும் அது கூறியது.

இதற்கிடையில், ட்ரம்ப் தனது சமூக ஊடகப் பதிவில், "ஈரான் மீதான தாக்குதலில் அமெரிக்காவுக்கு எந்தத் தொடர்பும் இல்லை. ஈரான் எந்த வகையிலும் அல்லது வடிவத்திலும் நம்மைத் தாக்கினால், அமெரிக்க ஆயுதப் படைகளின் முழு பலமும் வலிமையும் இதற்கு முன் கண்டிராத அளவில் அவர்கள் மீது இறங்கும்.

இருப்பினும், ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் ஒரு ஒப்பந்தத்தை நாம் எளிதாகச் செய்து, இந்த இரத்தக்களரி மோதலை முடிவுக்குக் கொண்டுவர முடியும்." என்று ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். (எ)

# ட்ரம்பின் கொள்கைக்கு எதிராக அமெரிக்காவில் போராட்டம்




வாஷிங்டன், ஜூன் 17

அமெரிக்காவில் ட்ரம்பின் குடியேற்ற கொள்கைக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்கள் வலுத்து வருகின்றன.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பொறுப்பேற்ற பிறகு பல்வேறு அதிரடி உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார்.

ட்ரம்பின் குடியேற்ற கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து உள்ளூர் மக்களும் போராட்டத்தில் இணைந்தனர். அப்போது கல் வீச்சு, வாகனங்களுக்குத் தீ வைப்பு போன்ற சம்பவங்கள் இடம்பெற்றன. எனவே பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டு வீசி போராட்டக்காரர்களை கலைத்தனர்.

இதனையடுத்து போராட்டக்காரர்கள் ட்ரம்புக்கு எதிராக முழக்கமிட்டனர். போராட்டம் மேலும் தீவிரம் அடைவதால் இதனைக் கட்டுப்படுத்த ட்ரம்ப் நிர்வாகம் அங்கு இராணுவத்தை குவித்துள்ளது. பொதுவாக தேசிய நெருக்கடி ஏற்படும் போதுதான் மாகாணங்களில் இராணுவத்தினர் நிறுத்தப்படுவர். ஆனால், தற்போது மாகாண ஆளுநரின் அனுமதியின்றி ட்ரம்ப் அங்கு இராணுவத்தை நிறுத்தியுள்ளார். இதனை எதிர்த்து கலிபோர்னியா மாகாண ஆளுநர் கவின் நியூசம் உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடுத்துள்ளார்.



இஸ்ரேல் - ஈரான் போர்ப்பதற்றம்

# நெதன்யாகு மகனின் திருமணம் ஒத்திவைப்பு

ஜெருசலேம், ஜூன் 17

இஸ்ரேல் - ஈரான் இடையே நீடிக்கும் போர்ப் பதற்றம் காரணமாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மகனின் திருமணம் ஒத்திவைக்கப்பட்டது.

அவ்னெர் நெதன்யாகு- அமித் யார்தேனி ஜோடியின் திருமணம் நேற்று நடைபெற இருந்தது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மே. இ. தீவுகள் அணி வெற்றி

## ரி - 20 தொடரை இழந்தது அயர்லாந்து

டப்ளின், ஜூன் 17

அயர்லாந்துக்கு எதிரான 3ஆவது ரி - 20 போட்டியில் 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கு இந்திய தீவுகள் அணி அபார வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடியது. இந்தத் தொடரின் முதல் 2 ஆட்டங்களும் மழை காரணமாக இரத்து செய்யப்பட்டது. இதனையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ரி - 20 போட்டி பிரெடியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 256 ஓட்டங்கள் குவித்தது. மேற்கு இந்திய தீவுகள் அணி தரப்பில் எவின் லூயிஸ் 91 ஓட்டங்கள் எடுத்தார். அயர்லாந்து தரப்பில் மத்தியூ ஹம்ப்ரிஸ் 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 257 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய அயர்லாந்து அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 194 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கு இந்திய தீவுகள் அணி அபார வெற்றி பெற்றது. அயர்லாந்து தரப்பில் அதிகபட்சமாக ராஸ் அடெய்ர் 48 ஓட்டங்கள் எடுத்தார்.



மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் அஹேல் ஹொசைன் 3 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி- 20 தொடரை 1-0 என மேற்கு இந்திய தீவுகள் அணி கைப்பற்றியது. (எ)




# "இறுதிப்போட்டி எங்களுக்கு சாதகமாக அமையவில்லை"

லண்டன், ஜூன் 17

எனக்கு டெஸ்ட் போட்டி மிகவும் பிடிக்கும். இறுதிப் போட்டிக்கு முன்னேறியது பெரிய சாதனையாகும். இருப்பினும், இறுதிப்போட்டி எங்களுக்கு சாதகமாக அமையவில்லை என்று அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் தெரிவித்தார்.

3ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்க அணிகள் மோதின. இதில், தென்னாபிரிக்க அணி சம்பியனானது.

இந்த நிலையில், இந்த ஆட்டத்தில் தோல்வி கண்ட பின்னர் கம்மின்ஸ் கூறுகையில், எப்போதும் விஷயங்கள் விரைவாக மாறக்கூடும். ஆனால், அது இங்கு மிகுந்த தொலைவில் இருந்தது. சில விஷயங்களை நாங்கள் சரியாக செய்யவில்லை. முதல் இன்னிங்ஸில் நல்ல முன்னிலை பெற்ற பிறகும் எங்களால் எதிரணியை வீழ்த்த முடியவில்லை.

தென்னாபிரிக்க அணி தனது 2ஆவது இன்னிங்ஸில் எங்களுக்கு எந்த வாய்ப்பும் வழங்கவில்லை. மார்க்ரம் மற்றும் பவுமா எங்களுக்கு எந்தவொரு வாய்ப்பும் வழங்காத வகையில் விளையாடினர். இது தென்னாபிரிக்க அணி ஏன் இங்கு இருக்கிறார்கள் என்பதையும் வெற்றியாளராக இருக்க தகுதியானவர்கள் என்பதையும் காட்டியுள்ளது.

அவர்கள் இந்த ஆட்டத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்- என்றார். (எ)

# இந்தியா - பாகிஸ்தான் போட்டி ஒக்ரோபரில்

டுபாய், ஜூன் 17

இந்தியா - பாகிஸ்தான் மோதும் ஒருநாள் போட்டி ஒக்ரோபர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

13ஆவது ஐ. சி. சி. மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணத் தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் 30ஆம் திகதி முதல் நவம்பர் 2ஆம் திகதி வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறவுள்ளது. இதில், 8 அணிகள் பங்கேற்கின்றன.

இந்தத் தொடர் முதலில் இந்தியாவில் மட்டுமே நடைபெறயிருந்தது. ஆனால், ஆண்களுக்கான சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்கேற்க இந்திய அணி பாகிஸ்தான் செல்ல மறுத்ததால் அதற்குரிய போட்டிகள் அனைத்தும் டுபாய்க்கு மாற்றப்பட்டன. இதன்படி, பாகிஸ்தானும் இந்தியாவுக்கு செல்லாது என்று அந்த நாட்டு கிரிக்கெட் சபை ஐ. சி. சி.யிடம் தெரிவித்தது. இதன் காரணமாக பாகிஸ்தானுக்குரிய ஆட்டங்கள் அனைத்தும் கொழும்பில் நடைபெறவுள்ளன.

இந்த நிலையில், இந்திய அணி பாகிஸ்தானுக்கு எதிராக ஒக்ரோபர் 5ஆம் திகதி விளையாடும் எனத் தகவல் வெளியாகியுள்ளது. மேலும், செப்ரெம்பர் 30ஆம் திகதி இலங்கையையும் ஒக்ரோபர் 9ஆம் திகதி தென்னாபிரிக்காவையும் ஒக்ரோபர் 12ஆம் திகதி அவுஸ்திரேலியாவையும் ஒக்ரோபர் 19ஆம் திகதி இங்கிலாந்தையும் ஒக்ரோபர் 23ஆம் திகதி நியூசிலாந்தையும் ஒக்ரோபர் 26ஆம் திகதி பங்களாதேஷையும் எதிர்கொள்ளும் வகையில் அட்டவணை அமைக்கப்படவுள்ளது. (எ)




# குயின்ஸ் கிளப் ரென்னிஸ்: டாட்ஜானா மரியா சம்பியன்

லண்டன், ஜூன் 17

குயின்ஸ் கிளப் ரென்னிஸ் தொடரில் டாட்ஜானா மரியா சம்பியனானார்.

பல நட்சத்திர வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள குயின்ஸ் கிளப் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. இதன் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், ஜேர்மனியின் டாட்ஜானா மரியா, அமெரிக்காவின் அமண்டா அனிசிமோவாவுடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய மரியா 6 - 3 மற்றும் 6 - 4 என்ற நேர் செற் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று கிண்ணத்தை கைப்பற்றினார். (எ)

## புரோ ஹொக்கி லீக்:

# அவுஸ்திரேலியாவிடம் இந்திய அணி தோல்வி

ஆன்ட்வெர்ப், ஜூன் 17

புரோ ஹொக்கி லீக் தொடரில் அவுஸ்திரேலியாவிடம் இந்தியா தோல்வியடைந்தது.

9 அணிகள் பங்கேற்றுள்ள 6ஆவது புரோ ஹொக்கி லீக் போட்டியின் ஐரோப்பிய சுற்றில் பெல்ஜியத்தில் உள்ள ஆன்ட்வெர்ப்பில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி 2 - 3 என்ற கோல் கணக்கில் அவுஸ்திரேலியாவிடம் வீழ்ந்தது.

ஐரோப்பிய சுற்றில் இந்திய அணி தொடர்ச்சியாக சந்தித்த 5ஆவது தோல்வி இதுவாகும். இதேபோல் பெண்கள் பிரிவில் லண்டனில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி 2-3 என்ற கோல் கணக்கில் அவுஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்தது. (எ)

# இலங்கை - பங்களாதேஷ் முதல் டெஸ்ட் இன்று

காலி, ஜூன் 17

இலங்கை - பங்களாதேஷ் அணிகள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பிக்கிறது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இதன்படி, இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி இன்று 17ஆம் திகதி காலி மைதானத்தில் ஆரம்பிக்கிறது. இதனையடுத்து 2ஆவது மற்றும் கடைசி போட்டி கொழும்பில் 25ஆம் திகதி தொடங்கவுள்ளது. இந்தத் தொடர் 4ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் சுழற்சிக்கு உட்பட்டது என்பதால் இரு அணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இந்த நிலையில், இந்தத் தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. தனஞ்சய டி சில்வா தலைமையிலான இந்த அணியில் தினேஷ் சண்டிமால், மத்தியூஸ், குசல் மெண்டிஸ் போன்ற முன்னணி வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கை அணி விவரம் பின்வருமாறு:- தனஞ்சய டி சில்வா, பதும் நிஸ்ஸங்க, ஓஷத பெர்னாண்டோ, லஹிரு உதார, தினேஷ் சண்டிமால், அஞ்சலோ மத்தியூஸ், குசல் மெண்டிஸ், கமிந்து மெண்டிஸ், பசிந்து சூரியபண்டார, சோனல் தினுஷா, பவன் ரத்நாயக்க, பிரபாத் ஜயசூரிய, தரிந்து ரத்நாயக்கே, அகில தனஞ்சய, மிலன் ரத்நாயக்க, அஷித பெர்னாண்டோ, கசுன் ராஜித மற்றும் இசிதா விஜேசுந்தர இடம்பிடித்துள்ளனர். (எ)

# இந்தியா - இங்கிலாந்து முதல் டெஸ்ட் 20ஆம் திகதி

லண்டன், ஜூன் 17

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி 20ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதில், முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 20ஆம் திகதி தொடங்குகிறது.

இந்த நிலையில் இந்திய டெஸ்ட் அணியின் தலைவர் சுப்மன் கில் அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது, தலைமை பயிற்சியாளர் கௌதம் கம்பீரிடமும் தெரிவுக் குழு தலைவர் அஜித் அகார்கரியுடனும் நான் பல முறை உரையாடியிருக்கிறேன். அவர்கள் என்னிடம் எந்த எதிர்பார்ப்பும் இல்லை என்று தெரிவித்தனர்.

என்னால் முடியாத ஒன்றை செய்து காட்ட வேண்டும் என்று அவர்கள் விரும்பவில்லை. எனவே, அவர்களிடம் இருந்து எந்த எதிர்பார்ப்போ அல்லது அழுத்தமோ எனக்கு இல்லை. ஆனால் ஒரு தலைவராகவும் வீரராகவும் எனக்குள் சில எதிர்பார்ப்பு உண்டு. அவை அனைத்தும் நான் என்னிடம் வைத்திருக்கும் எதிர்பார்ப்புகள் தான். அது அவர்களிடமிருந்து வந்ததல்ல.

கிண்ணத்தை வெல்வதை தவிர்த்து அணிக்குள் ஒவ்வொருவரும் மிகவும் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும் ஒரு கலாசாரத்தை உருவாக்க விரும்புகிறேன். இதுபோன்ற சூழலை உருவாக்குவது மிகவும் கடினம் என்பது எனக்குத் தெரியும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபாகரன்கூட...

பணம் செலுத்த முடியாமல் அவை திரும்பிச் சென்றன.

அது மாத்திரமின்றி அத்தியாவசிய பொருட்களுக்காக மக்கள் வரிசைகளில் பல நாட்கள் காத்திருக்கவேண்டிய துரதிர்ஷ்டவசமான நிலைமையும் ஏற்பட்டது. ஊழல், மோசடி நிறைந்த அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளால் தான் இந்த நிலைமை ஏற்பட்டது என மக்கள் நம்பினர். அதுதான் உண்மை நிலைமை என்பதே எனது நம்பிக்கையுமாகும். இளம் தலைமுறையினர் இந்த யதார்த்தத்தை உணர்ந்து கொண்டுள்ளனர்.

எனவே முந்தைய கால கட்டத்திலிருந்த அரசியல்வாதிகள் தற்போது காலாவதியாகிவிட்டனர். எனவே, இந்த அரசாங்கத்தை விமர்சிக்கவேண்டிய அவசியமில்லை என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும். இந்த அரசாங்கத்தின்மீது விமர்சனங்களை முன்வைத்தால் முந்தைய ஊழல், மோசடி அரசியல்வாதிகள் அதனால் பலன் பெறுவார்கள்.

ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இந்த அரசாங்கத்தின் மீது மக்கள் அதிருப்தியடைந்து, ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணினாலும் முந்தைய ஆட்சியாளர்களுக்கு மீண்டுமொரு வாய்ப்பளிப்பார்கள் என்று நான் நம்பவில்லை.

கடந்த தேர்தல்களில் ஐக்கிய தேசிய கட்சி, பொதுஜன பெரமுனவிலுள்ள 70 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்தபோதிலும் 5 இலட்சம் வாக்குகளை மாத்திரமே பெற்றுக் கொள்ள முடிந்தது.

சஜித் பிரேமதாஸவின் வாக்குகளும் 50 சதவீதத்தால் குறைவடைந்தது. எவ்வாறிருப்பினும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஓரளவு வாக்குகளை பெற்றுள்ளதால் அதனை அடிப்படையாகக் கொண்டு பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர்.

2 இலட்சம் வாக்குகள் அதிகம் பெற்றுள்ள சஜித், அடுத்து தானே ஜனாதிபதி என எண்ணிக் கொண்டிருக்கின்றார். நாமலுக்கு 6 இலட்சம் வாக்குகள் அதிகம் கிடைத்துள்ளன. தந்தையைப் போன்று மீண்டும் நாட்டை ஏமாற்றி பிழைக்க முடியும் என்று அவர் எண்ணிக் கொண்டிருக்கின்றார். எவ்வாறிருப்பினும் இவர்கள் இருவரிடமும் மக்கள் நாட்டை ஒப்படைப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

தற்போது இவர்களுக்கு இராணுவ வீரர்கள் மீது புது விதமான மரியாதை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இராணுவ வீரர்களை சிப்பாய்கள் என விளித்தாரென அதனை பெரும் குறையாகக் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், நாம் அது குறித்து கவலை கொள்ளவில்லை. ராஜபக்ஷர்கள்தான் இராணுவத்தினரை கொண்டு இலாபம் தேட முற்படுகின்றனர். இராணுவத்துக்கு சிப்பாய்களே ஆட்சேர்க்கப்படுகின்றனர். இராணுவ வீரர்கள் அல்ல. எனவே, அது வெட்கப்படக் கூடிய சொற் பிரயோகம் அல்ல. இன்று இராணுவ வீரர்களை சிப்பாய்கள் என அழைத்தமைக்காக முதலை கண்ணீர் வடிக்கும் ராஜபக்ஷர்கள், அன்று யுத்தம் நிறைவடைந்த பின்னர் இராணுவத் தளபதியான என்னை சிறையிலடைத்து நன்கு உபசரித்தனர்.

என்னுடன் பணியாற்றிய - இராணுவத்தில் முக்கிய பதவி நிலைகளை வகித்த 35 இராணுவ அதிகாரிகள் ஓய்வூதியம் இன்றி சேவையிலிருந்து நீக்கப்பட்டனர்.

சரத் பொன்சேகாவை சிறையிலடைத்ததை தன்னால் அனுமதிக்க முடியாது என தற்போது நாமல் கூறுகின்றார். ஆனால் அதனை அவரது தந்தையும் சித்தப்பாவும் அனுமதித்தனர். எனது மகள்கள் இருவரும் அமெரிக்காவிலிருந்து திரும்பும்போது, அவர்கள் விமான நிலையத்தில் பல மணித்தியாலங்கள் தடுத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர். பிரபாகரன்கூட இவ்வாறு எமது குடும்பங்கள் மீது தாக்குதல்களை நடத்தவில்லை. ஆனால், ராஜபக்ஷர்கள் எமது குடும்பத்தினரையும் பழிவாங்கினர்-என்றார். (அ)

## நேற்று முதல்...

வெளியிட்டதுடன் ஆனையிறவு உப்பு என பெயரை மாற்றம் செய்யுமாறு கோரிக்கை விடுத்தனர்.

அதன் பின்னர், அரசாங்கத்தினால் பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஆனையிறவு உப்பு என்ற பெயரில், உப்பு நேற்று முதல் சந்தைக்கு வந்துள்ளது.

அந்தவகையில், கிளிநொச்சி பரந்தன் மற்றும் கிளிநொச்சி நகரில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு, ஆனையிறவு உப்பு அதன் முகாமையாளரால் வழங்கி வைக்கப்பட்டது. (அ)

## யாழ். குடா...

நிலையங்களில் மக்கள் நீண்ட வரிசையில் நின்று எரிபொருளை பெற்றனர்.

இதேவேளை, எரிபொருளுக்கு தட்டுப்பாடு இல்லை. மக்களே எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசையில் ஒன்று கூடி நின்று எரிபொருளை பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றனர் என பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வட மாகாண பிராந்திய முகாமையாளர் தெரிவித்திருந்தார். (அ)

## கொழும்பு மாநகர...

எதிர்க்கட்சிகள் சார்பில் போட்டியிட்ட ரீசா ஷரூக் 54 வாக்குகளைப் பெற்றுக்கொண்டார்.

மொத்தமாக 117 வாக்குகள் அளிக்கப்பட்டிருந்த நிலையில், 02 வாக்குகள் நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயராக தேசிய மக்கள் சக்தியின் ஹேமந்த குமார தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மாநகர சபையின் முதல் அமர்வு, உள்ளூராட்சி ஆணையாளர் சாரங்கிகா ஜயசுந்தர தலைமையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதன்போது மேயர் தெரிவு இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடத்தப்படுமா அல்லது திறந்த வாக்கெடுப்பு மூலம் நடத்தப்படுமா என்பது தொடர்பில் சபையில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

மாநகர சபையின் மேயர் தெரிவு முறைமை தொடர்பில், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆகியன பகிரங்க வாக்கெடுப்பு நடத்துமாறு கோரிக்கை விடுத்தன. தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் இந்த முன்மொழிவை எதிர்த்தனர்.

நீண்ட நேர வாதப் பிரதிவாதங்களுக்கு பின்னர், நேரடியாக கொழும்பின் புதிய மேயரைத் தெரிவு செய்ய இரகசிய வாக்கெடுப்பை நடத்துவதற்கான முன்மொழிவு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கொழும்பு மாநகர சபையின் மேயர் பதவிக்கு தேசிய மக்கள் சக்தியின் வ்ராய் கெல்லி பல்தாசர் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் ரீசா ஷரூக் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின்படி, கொழும்பு மாநகர சபையில் ஆட்சி அமைப்பதற்கு எந்தவொரு கட்சியோ அல்லது சுயேச்சைக் குழுவோ முழுமையான வெற்றியை பெறவில்லை.

தேசிய மக்கள் சக்தி சார்பில் 48 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் 29 உறுப்பினர்களும், ஐக்கிய தேசிய கட்சி சார்பில் 13 உறுப்பினர்களும், பொதுஜன பெரமுன சார்பில் 5 உறுப்பினர்களும் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் 4 உறுப்பினர்களும், சுயேச்சைக் குழு எண் 03 சார்பில் 3 உறுப்பினர்களும், சர்வஜன அதிகாரம் சார்பில் 2 உறுப்பினர்களும், ஐக்கிய சமாதான கூட்டணி சார்பில் 2 உறுப்பினர்களும், சுயேச்சைக் குழு எண் 4, 5 சார்பில் தலா 2 உறுப்பினர்களுமாக 4 உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் முன்னணி, தேசிய மக்கள் கட்சி, தேசிய விடுதலை முன்னணி, பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜனநாயக தேசிய கூட்டமைப்பு, சுயேச்சைக் குழு எண் 01 மற்றும் சுயேச்சைக் குழு எண் 02 சார்பில் தலா ஒவ்வொரு உறுப்பினர்களும் கொழும்பு மாநாகர சபைக்கு தெரிவாகியிருந்தனர். (அ)

## நாணய நிதியத்தின் இறுதி...

தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு தேவைப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் இறுதித் திட்டமாக இது இருக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இலங்கை அனைத்து குடிமக்கள் மற்றும் எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கையை மேம்படுத்தும் நிலையான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியின் பாதையை தொடருகின்ற நிலையில் சர்வதேச நாணய நிதியம் உறுதியான பங்காளியாகயிருக்கும் என அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்ததுபோல, இந்த நேரம் வித்தியாசமானதாகயிருக்கவேண்டும் என தெரிவித்துள்ள அவர், இலங்கைக்கு தேவைப்படும் இறுதி சர்வதேச நாணயநிதியத்தின் திட்டமாக இதனை மாற்றுவோம் எனவும் கூறினார்.

இலங்கை தற்போதைய பாதையில் தொடர்ந்தால் இது சாத்தியம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## போதியளவு...

இந்நிலையிலேயே யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

மேலும், யாழ். மாவட்டத்தில் திங்கட்கிழமை எரிபொருளுக்காக ஒரு செயற்கை தட்டுப்பாட்டை உருவாக்கியிருப்பதாக அறிந்தேன். இன்றைய தினம்(நேற்று) அநுராதபுரத்திலிருந்து 23 பவுசர்களில், ஒரு பவுசரில் 6 ஆயிரத்து 63 லீற்றர் வீதம் ஒரு இலட்சத்து 51 ஆயிரத்து 800 லீற்றர் பெற்றோல் யாழ். மாவட்டத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

குறித்த எரிபொருட்கள் யாழ். மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, நாளையும் (இன்று) இதே அளவான எரிபொருள் எடுத்து வரப்பட்டு யாழ். மாவட்டதிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதேபோன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்ட காங்கேசன்துறை எரிபொருள் சேமிப்பு நிலையத்துக்கு தொடர்ச்சியாக எரிபொருள் எடுத்து வரப்பட்டு சேமிக்கப்பட்டு வருகின்றது ஆகவே, யாழ். மாவட்ட மக்கள் செயற்கையான எரிபொருள் தட்டுப்பாட்டை உருவாக்க வேண்டாமென வேண்டுகோள் விடுக்கின்றேன் -என்றார். (அ)

## நாணய நிதிய...

பங்கேற்புடன் மீட்புப் பாதை - கடன் மற்றும் நிர்வாகம் என்ற தொனிப்பொருளில் நேற்று காலை கொழும்பில் நடைபெற்ற விசேட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்-

நாம் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள நேரிட்டது. அதன் காரணமாக இரண்டு தெரிவுகளில் ஒரு தெரிவை மேற்கொள்ள வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டது. அதில் ஒரு வழி பழைய பாதையிலேயே பணிப்பதாகவும் மற்றைய பாதை புதிய வழியில் பயணிப்பதாகவும் அமையப்பெற்றிருந்தது.

இந்நிலையில் நாம் தற்போது தெரிவு செய்துள்ள பாதையின் ஊடாக பல வெற்றிகரமான நகர்வுகளை மேற்கொள்ள முடிந்துள்ளது. நெருக்கடியின் தாக்கம் இன்னமும் சரியாகவில்லை. உள்ளக ரீதியில் அந்த நெருக்கடி இன்னமும் தீரவில்லை என்பதை நாம் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும்.

மறுசீரமைப்பு அதில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. அரச உறுப்பில் காணப்படும் குறைபாடுகளை நீக்க தேவையாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். மோசடிகள் ஒழிக்கப்படவேண்டும். அவற்றில் சில அரச நிறுவனங்களை மூட வேண்டும். மேலும் பல அரச நிறுவனங்களின் இலக்கையும் நோக்கையும் மாற்றியமைக்க வேண்டும். 2028ஆம் ஆண்டுக்குள் கடன்களை அடைப்பதற்குத் தேவையான பொருளாதார வளர்ச்சி, பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்க முடியுமென இலங்கை நம்புகின்றது - என்றார். (அ)

## வவுனியா...

உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் வவுனியா மாநகர சபை ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று காலை நடைபெற்றது.

இதன்போது முதல்வர் தெரிவு, பிரதி முதல்வர் தெரிவுகள் பகிரங்க வாக்களிப்பின் மூலம் நடத்தப்பட்டன.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜனநாயக தேசிய கூட்டணி, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவுடன் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியை சேர்ந்த காண்டீபன் முதல்வர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டார்.

இதேவேளை, தொழிலாளர் கட்சி, சுயேச்சைகளின் ஆதரவுடன் தேசிய மக்கள் சக்தியின் சிவசோதி சிவசங்கர் முதல்வர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டார்.

21 உறுப்பினர்களைக் கொண்ட வவுனியா மாநகர சபையில் காண்டீபன் 11 வாக்குகளை பெற்று மாநகர சபை முதல்வராக தெரிவானார். எதிர்த்து போட்டியிட்ட சிவசோதி சிவசங்கர் 10 வாக்குகளை பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து பிரதி முதல்வர் தேர்வு இடம்பெற்றது. இதில், ஜனநாயக தேசிய கூட்டணி சார்பில் போட்டியிட்ட பரமேஸ்வரன் கார்த்தீபனுக்கு ஆதரவாக 11 வாக்குகளும், சுயேச்சைக்குழுவை சேர்ந்த சிவசுப்பிரமணியம் பிரேமதாசுக்கு 10 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதனடிப்படையில் பரமேஸ்வரன் கார்த்தீபன் பிரதி முதல்வராக தெரிவு செய்யப்பட்டார். (அ)

## இலங்கைக்கு...

59ஆவது அமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சமீபத்தைய வரிகள் குறித்தே இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ள மனித உரிமைகள் ஆணையாளர், வர்த்தகப் போரின் அதிர்ச்சிகள் மூன்றாம் உலக நாடுகளை சுனாமியின் வலுவோடு தாக்கும் என தெரிவித்துள்ளார்.

மனித உரிமை பேரவையின் கரீபியன் நாடுகள், அபிவிருத்தி அடைந்துவரும் சிறிய தீவு நாடுகள் ஆகியவை மோசமான பாதிப்பை எதிர்கொள்ளும் என குறிப்பிட்டுள்ள அவர், இலங்கை, பங்களாதேஷ், கம்போடியா, வியட்நாம் போன்ற ஏற்றுமதி தொழில்துறையை அடிப்படையாகக் கொண்ட நாடுகள் பெரும் பேரழிவு பாதிப்புகளை எதிர்கொள்ளும் என கூறினார். (அ)

## டீல் அரசியல்...

அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் ஆணைக்கு அமையவே உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருந்தோம். அந்த வகையில் சில உள்ளூராட்சி மன்றங்களில் பொதுஜன பெரமுனவும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஆட்சியமைத்துள்ளது.

இதேபோன்று சில உள்ளூராட்சி மன்றங்களில் தேசிய மக்கள் சக்தியும் பொதுஜன பெரமுனவும் ஆட்சியமைத்துள்ளன. தேர்தல் சட்டத்திற்கு அமைய அவ்வாறான முறைமையே காணப்படுகின்றது.

இத்தகைய பின்னணியில் மறுபுறமாக டீல் செய்வதற்கு மக்கள் விடுதலை முன்னணியினர் நன்கு பழக்கப்பட்டுள்ளனர். டீல் அரசியலை முடிவுக்கு கொண்டு வருவதாக கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த மக்கள் விடுதலை முன்னணியினரை பார்க்கிலும் டீல் அரசியலை மேற்கொள்பவர்களாக இருக்கின்றனர்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# முல்லைத்தீவில் இரு கடைகள் தீயில் முற்றாக எரிந்து நாசம்!

## தீயணைப்பு இயந்திரம் இல்லாதமை குறித்து விசனம்





முல்லைத்தீவு, ஜூன் 17

**முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலைக்கு முன்பாக ஏற்பட்ட தீயில் இரு கடைகள் முற்றாக எரிந்த சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.**

மாவட்டத்தில் தீயணைப்புக் கருவி இல்லாத காரணத்தினாலேயே இவ்வாறான பெரும் அசம்பாவிதங்கள் ஏற்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு கிச்சிராபுரம் கிராம சேவையாளர் பிரிவில் மாஞ்சோலை வைத்தியாசாலை முன்பாக உள்ள உணவகம் ஒன்றில் ஏற்பட்ட தீயில் உணவகம் மற்றும் அருகில் உள்ள காலணி விற்பனை நிலையம் என்பன காலை 7.30 மணியளவில் முற்றாக எரிந்துள்ளன.

இதனையடுத்து அருகே இருந்த கடைகளிலுள்ள பொருட்கள் துரித கதியில் அகற்றப்பட்டன.


குறித்த சம்பவத்தை அடுத்து சம்பவ இடத்துக்கு இராணுவம், பொலிஸார், அப்பகுதி வர்த்தகர்கள், பொதுமக்கள் இணைந்து தீயைக் கடும் பிரயத்தனத்தின் மத்தியில் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சம்பவ இடத்தை பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர்கள் பார்வையிட்டனர்.

அத்தோடு தீ ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தீ பரவும் சந்தர்ப்பத்தில் தீயணைப்புக் கருவி இல்லாத காரணத்தினாலேயே பெரும் அசம்பாவிதங்கள் ஏற்படுவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்தனர். (அ)

# நெடுந்தீவில் விபத்து பாதசாரி உயிரிழப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 17

நெடுந்தீவு பிரதான வீதி இலங்கை வங்கிக் கிளை அருகே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஓட்டோ விபத்தில் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நெடுந்தீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பரணாந்து சகாயதேவதாஸ் (வயது 59) என்பவரே உயிரிழந்துள்ளார்.

வேகமாக வந்த ஓட்டோ வீதியைக் கடக்க முற்பட்டவரை மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் படுகாயமடைந்தவரை மீட்டு,வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதேவேளை ஓட்டோச் சாரதி நெடுந்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

விபத்து தொடர்பில் நெடுந்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியம் பாராட்டு!

## முதல் நிகழ்வு 22ஆம் திகதி கிளிநொச்சியில்

கொழும்பு, ஜூன் 17

2023ஃ2024 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை மாகாண மட்டத்தில் பாராட்டும் நிகழ்ச்சித் திட்டத்தை ஜனாதிபதி நிதியம் ஏற்பாடு செய்துள்ளது.

அங்கு, 2023ஃ2024 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற, ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 60 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு நிதி புலமைப்பரிசில் மற்றும் சான்றிதழ்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2023ஃ2024 பரீட்சைகள் தொடர்பாக பரீட்சைகள் திணைக்களம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட பெறுபேறுகளை கருத்தில் கொண்டு இந்த மாணவர் கள் தெரிவு, மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாகாண மட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டத்தின் முதல் நிகழ்ச்சித் திட்டமாக, 2023 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற, வட மாகாண மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வை ஜூன் 22 ஆம் திகதி கிளிநொச்சியில் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி, 2023 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் இவ்வாறு பாராட்டப்படவுள்ளனர்.

இதேவேளை, ஏனைய மாகாணங்களிலும் விரைவில் நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ)

# இலங்கை ரூபாவின் பெறுமதியில் வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 17

கடந்த வெள்ளிக்கிழமையுடன் ஒப்பிடுகையில் நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 295 ரூபாய் 75 சதம், விற்பனைப் பெறுமதி 304 ரூபாய் 5 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 399 ரூபாய் 27 சதம், விற்பனைப் பெறுமதி 413 ரூபாய் 39 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 339 ரூபாய் 39 சதம், விற்பனைப் பெறுமதி 352 ரூபாய் 22 சதம்.

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 361 ரூபாய் 23 சதம், விற்பனைப் பெறுமதி 377 ரூபாய் 49 சதம்.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 216 ரூபா 36 சதம், விற்பனைப் பெறுமதி 224 ரூபாய் 87 சதம்.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 189 ரூபாய் 54 சதம், விற்பனைப் பெறுமதி 199 ரூபாய் 25 சதம்.

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 228 ரூபாய் 72 சதம், விற்பனைப் பெறுமதி 238 ரூபாய் 64 சதம்.

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 2 ரூபாய் 3 சதம், விற்பனைப் பெறுமதி 2 ரூபாய் 11 சதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### மதுபானச்சாலையில் கைகலப்பு

# பொலிஸாரை கண்டதும் ஓட்டோவை கொள்ளையடித்து தப்பி சென்ற நபர்!

யாழ்ப்பாணம், ஜூன் 17

கோப்பாய் பொலிஸ் பிரிவில் உள்ள மதுபானச்சாலை ஒன்றில் கைகலப்பில் ஈடுபட்டவர்களில் ஒருவர் அங்கு. பொலிஸார் வந்ததை அடுத்து, வீதியில் சென்ற ஓட்டோ வைக் கொள்ளையடித்து தப்பிச் சென்றார்.

மதுபானச்சாலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மது அருந்திக்கொண்ட இரு தரப்பினர்கள் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்து, மதுபானச்சாலை உரிமையாளர் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்தார். பொலிஸார் அங்கு விரைந்தபோது கைகலப்பில் ஈடுபட்டிருந்த நபர்கள், பொலிஸாரையும் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

தப்பிச் சென்றவர்களில் ஒருவர் , வீதியில் பயணித்த ஓட்டோவை மறித்து அதன் சாரதியை தாக்கிவிட்டு, ஓட்டோவைக் கொள்ளையடித்து அதில் தப்பிச் சென்றுள்ளார்.

தப்பிச் சென்றவர்களில் ஏனையவர்களில் இருவரை பொலிஸார் துரத்தி ச்சென்று கைது செய்தனர்.

அவர்களில் ஒருவர் கைகலப்பில் காயமடைந்த நிலையில் காணப்பட்டமையால், அவரை பொலிஸ் பாதுகாப்புடன் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மற்றையவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், ஏனையவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதேவேளை வீதியில் சென்ற தன்னை வழிமறித்து தாக்கி, தனது ஓட்டோவைக் கொள்ளையடித்து சென்றுள்ளார்கள் என ஓட்டோச் சாரதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யதுள்ள நிலையில் முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.